# நீர்வேலி

# அத்தியார் நினைவு மலர்

# Neervely

# Attiaar Memorial Number

# அத்தியார் நினைவு மலர்

# Attiaar Memorial Number

வெளியீடு:
நீர்வேலி
அத்தியார் நினைவு மன்றச் சபை

மூன்றாம் பதிப்பு:
மாணிக்கவாசகர் திருவாசகம்
22.09.2016

*Published by*

*NEERVELY, ATTIAAR MEMORIAL COMMITTEE*

## நூல் விபரம்

நூல் - அத்தியார் நினைவு மலர்

01ஆம் பதிப்பு - 22.09.1962

வெளியீடு - நீர்வேலி அத்தியார் நினைவு மன்றச்சபை

02ஆம் பதிப்பு - 22.09.2002

வெளியீடு - நீர்வை மணி

03ஆம் பதிப்பு - 22.09.2016

வெளியீடு - மாணிக்கவாசகர் திருவாசகம்

பக்கங்கள் - 56

அச்சுப்பதிப்பு - ஷாம்பவி பதிப்பகம்.
நீர்வேலி. - யாழ்ப்பாணம்.
021 222 4143

## தேவாரம்

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்டமில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே.

- அப்பர் சுவாமிகள்.

உ
சிவமயம்

# ஸ்தாபகர்
# நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி



## முதலியார் அ. அத்தியார் அருணாசலம் அவர்கள்

(சமாதான நீதவான்)

தோற்றம்: 27.08.1887 மறைவு: 22.09.1961

# சமர்ப்பணம்

தன் உள்ளத்து நினைவுகள் எல்லாவற்றையும் காலன் கையிற் கொடுத்து அமரத்துவம் அடைந்த அத்தியார் அருணாசலம் அவர்களுக்கு ஒரு நினைவு மலர் வெளியிட வேண்டும் என்ற அவா இன்று பூர்த்தியாவதை இட்டு மகிழ்ச்சி அடைகின்றோம்.

அமரத்துவம் அடைந்து ஓராண்டு பூர்த்தியாகின்ற இத்தினத்தில் இம்மலர் வெளியாகின்றது.

இம்மலர் வெளியீட்டுக்காக விஷயதானம் தந்துதவிய அத்தனை பெரியோர்களுக்கும் நிதி உதவியீந்த அத்தனை நண்பர்கட்கும் எங்களது மனமார்ந்த நன்றி.

அத்துடன்இம்மலர் வெளியாகுமா? ஆகாதா? என்ற ஐயப்பாட்டில் கிடந்த இம்மலரோ எப்படியும் வெளியிட வேண்டும் என்று அச்சுமையைப் பொறுப்பேற்ற மலர் நிர்வாக உறுப்பினர்க்கும் எமது கடப்பாடுடையதாகுக.

இனி, வருங்காலச் சந்ததியை வளப்படுத்தும் அத்தியார் இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு இதய பூர்வமாக அன்புடன் இம்மலரை சமர்ப்பிக்கின்றோம். ஏன்?

அன்னாரின் புகழ் நீடலும் அவர்வழித் தொண்டாற்றவும் அவர்களேயுரியராகலின் அவர்களுக்கே இச்சமர்ப்பணம் உரிதாகுக.

இம்மலரில் சேர்க்கப்பட்ட முதலியார் அவர்களது புகைப்படம் ஓய்வு பெற்ற சித்திர வித்தியாதரிசி S. R. கனகசபை அவர்கள் வரைந்த தைலவர்ணப் பிரதிமைப் படத்திலிருந்து எடுக்கப்பட்டது. அன்னார்க்கு எம் உள்ளம் கனிந்த நன்றி.

**வணக்கம்.**

## மீள் வெளியீடு

உயர்திரு அ. அத்தியார் அவர்களின் 55ஆவது ஆண்டினை நினைவு கூரும் முகமாக அவரின் பணிகளையும் சேவைகளையும் ஞாபகப்படுத்துவதற்கும் திரும்ப திரும்ப நினைவு கூருவதற்கும் இந்த மீள்பதிப்பு உதவியாக இருக்கும் என்பதற்காகவும் இவ் நினைவு மலர் பிரசுரிக்கப்படுகின்றது.

இவ் நினைவு மலர் மீண்டும் மூன்றாம் பதிப்பாக வெளிவருவதனையிட்டு பெருமைப்படுகின்றேன்.

இவ்வண்ணம்,

22.09.2016 மாணிக்கவாசகர் திருவாசகம்.

## மீள்பதிப்புரை

நீர்வேலிக் கிராமத்தின் சிறப்பிற்கும், வளத்திற்கும் முன் நின்று உழைத்த பெரியார்களுள் முதலியார் அத்தியார் அருணாசலம் அவர்கள் முதன்மையானவர் ஆவார்.

கல்வி, சமூக, சமய கலாசாரத்துறை சார்ந்த பல்வேறு வளர்ச்சிகட்கும் நீர்வைக்கிராமத்திற் சிறப்பாகப் பணியாற்றியவர். இப்பெரியாரின் வரலாற்றை தெரிந்திருப்பவர்கள் ஒரு சிலரேயாவர். கடந்த நாற்பதாண்டுகட்கு முன் இவருடைய வரலாற்றைத் தெரிந்திருப்பவர்கள் சிலரேயாவர். கடந்த நாற்பதாண்டுகட்கு முன் இவருடைய நினைவு மலர் வெளியிட்டிருந்தும், நாட்டில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களாலும், இடப்பெயர்வுகளாலும் பல்வேறு வரலாற்று நூல்களும் அழிந்து சிதைந்து போயின.

இன்றைய எதிர்கால சந்ததியினர் இவற்றை தெரிந்திருக்க வேண்டியும். எமது வராற்று ஆவணங்களைப் பேணி பாதுகாத்து, எமது சமுதாயத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் தரவேண்டுமெனும் அவாவினாலும் நீர்வையூரின் கல்வித் தாத்தா எனப் போற்றப்படும் அமரர் முதலியார் அத்தியார் அருணாசலம் அவர்களது நினைவு மலரை மீள்பதிப்புச் செய்வதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.

இம்முயற்சிக்கு ஒத்துழைப்பும், உற்சாகமும் தந்த அத்தியார் இந்துக் கல்லூரிச் சமூகத்திற்கு எமது நன்றிகள் உரியதாகும்.

22.09.2002

அன்புடன்
நீர்வைமணி

# அணிந்துரை

ஒரு நிறுவனத்தின் நோக்கங்கள் – குறிக்கோள்கள் அந் நிறுவனத்தை நிறுவியவரின் எண்ணங்களைப் பிரதிபலிப்பனவாக இருப்பதைக் காணலாம். முதலியார் அத்தியார் அருணாசலம் அவர்களின் தூய சிந்தையில் இருந்து எழுந்த எண்ணங்களை அவர் நிறுவிய அத்தியார் இந்துக்கல்லூரி செயல்படுத்துவது அவசியமாகும். இந்த வகையில் அப்பெருமகனது குணாதிசயங்களை அறிந்திருப்பது இக்கல்லூரியைச் சார்ந்த அனைவருக்கும் அவசியமானது.

நிறுவுனர் சிவபதம் அடைந்து ஓர் ஆண்டு நிறைவில் 1962 ஆம் ஆண்டு '"அத்தியார் நினைவு மன்றச்சபை" என்ற அமைப்பினால் வெளியிடப்பட்ட மலர் இன்று எம்மில் பலருக்குத் தெரியாது. இம்மலரில் அமரர் அத்தியார் அருணாசலம் அவர்கள் கல்லூரியை நிறுவிய காலத்தில் இங்கு கல்வி கற்ற மாணவர்கள், கடமையாற்றிய ஆசிரியர்கள், அவருடன் பழகிய அரச அதிகாரிகள், சமூக சேவையாளர்கள் எனப்பலரும் அவரைப்பற்றி பலவகைக் குறிப்புக்களை எழுதியுள்ளனர். இந்நூல் சமூகத்தில் அருகியிருக்கும் தன்மையக் கண்டு அதனைத் தனது செலவிலேயே மீள்பதிப்புச் செய்து இலவசமாக வெளியிட முன்வந்த பிரம்மஸ்ரீ கு.தியாகராஜக் குருக்கள் (நீர்வைமணி) பாராட்டப்பட வேண்டியவர். அவரின் இத்தகைய சேவையினால் அத்தியார் இந்துக் கல்லூரிச் சமூகம் உற்சாகம் பெற்று அமரரின் எண்ணங்களை அடைய, கல்லூரியின் உயர்வுக்கு உழைக்கும் என்பது உறுதி.

இ. குணநாதன்
அதிபர்
யா/ அத்தியார் இந்துக் கல்லூரி
நீர்வேலி.

22.09.2002

# அத்தியார் நினைவு மலர்
# உள்ளுறை


பக்கம்

1. அகரவரிசையில் "அத்தியார்" தோற்றம் — 01
பழைய மாணவன், அ. இ. கல்லூரி

2. சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் அனுப்பிய செய்தி — 02

3. கண்ணீர்த் துளிகள் – நீருரான் — 03

4. அஞ்சலி செய்வோம் – மு. புனிதவதி, அ.இ.கல்லூரி — 05

5. அத்தியார் அவர்களின் சைவப் பண்பு — 07
பிரம்மஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள், அச்சுவேலி

6. நம்மை விட்டுப் பிரிந்த நல்லவர் — 08
மு. கனகசபேசன் அவர்கள், கணக்குப் பரிசோதகர் அலுவலகம், கொழும்பு

7. அத்தியார் ஓர் பரோபகாரி — 10
திரு.தி.முருகேசபிள்ளை அவர்கள், காரியாதிகாரி, வவுனியா

8. அத்தியார் எங்கள் கல்வித் தாத்தா — 13
கு. தியாகராச சர்மா அவர்கள், அ.இ.கல்லூரி, நீர்வேலி

9. அத்தியார் அருணாசலம் — 15
செல்வன் க.மகாலிங்கம், யாழ். இள. எமு. சங்கம்

10. அத்தியார் வரலாற்றுரை — 16
திரு. மா. வைத்தியலிங்கம் அவர்கள், ஈழநாடு அச்சகம், யாழ்ப்பாணம்

11. முதலியார் அவர்கள் ஓர் இலட்சிய புருஷன் — 19
திரு.ஞு.மு.கந்தையா அவர்கள். ஆசிரியர் அ.இ. கல்லூரி

12. அத்தியார் அணையாத சோதி — 22
திரு.க. சின்னராசா அவர்கள், நீர்வேலி

13. பிறந்த நாட்டைப் பொன்னாடாக்கிய புனிதர் — 25
செல்வன். க. மகாலிங்கம் அ.இ.கல்லூரி

14. பொற்கதிர்கள் கொய்வதற்கு புறப்படுவோம் வாரீர் 27
செல்வன். த. காங்கேயன் அ. இ. கல்லூரி பழைய மாணவன்

15. அத்தியார் அமைத்த கல்லூரி 29
திரு. பொ. சுப்பிரமணியம் அவர்கள் ஆசிரியர், அ.இ. கல்லூரி

16. சிந்தையும் சொல்லும், செயலும் ஒன்றியிருந்தார் 31
திரு. ஆ. தெட்சணாமூர்த்தி அவர்கள், முன்னாள் யாழ். மாவட்ட உதவியதிபர்

17. ஆயிரத்தில் ஒருவர் 34
திரு. சி. தர்மலிங்கம் அவர்கள், காமாட்சி அம்பாள் சங்கம், நீர்வேலி

18. கடன்பட்ட நிலையிலும் கடமையை மறவாதவர் 39
ஆசிரியர் திரு. சு. நாகலிங்கம் அவர்கள் வல்லை நெய்தல் ஆலை ஸ்தாபனம்

19. நீர்வை அன்னை ஈன்ற நிகரில்லாத் தலைவன் 42
திரு. க. கணபதிப்பிள்ளை அவர்கள், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை

20. A Philanthrophist 45
by. S. Sivasunbramaniam Esqr, proctor, s. c. colombo

21. The Late Mudaliyar Attiaar Arunacalam J.P. 48
Gste Mudaliyar C. Thiagarajah Esqr

22. A. Tribute to mudaliyar Attiaar Arunachalam J.P. 50
Muhandaram E.P Rasiah Esqr J.P.

23. Attiaar The Utilising Social Worker 52
J. T. Sabapathipillai Esqr, D.R.O Kopay

24. The Late Mudaliyar Attiaar Arunachalam J.P. 54
S.K.Kandiah Esqr Teacher, Attiaar Hindu Colleeg.

25. Message From R.M Salmom Esqr. 56

# அகர வரிசையில் 'அத்தியார்' தோற்றம்

## பழைய மாணவன் அ. இ. கல்லூரி

இராகம் : ஹிந்தோளம் தாளம் : ஆதி

அத்தியார் அவர்களை அறியார் உளரோ!

ஆர்வம், ஆக்கம் அவரின் பண்பு

இவரின் பள்ளியே ஊரின் சிறப்பு

"ஈவது விலக்கேல்" இவரின் குறிக்கோள்

உழைப்பெலாம் தமது பள்ளிப் பணிக்கே.

ஊரின் வளத்திற்கு உவந்த வள்ளல்.

எங்கும் பணிகள் எங்கும் தொண்டுகள்!

ஏவாதாற்ற முன்வந்த முதல்வன்.

ஐபதினைந்து ஆண்டுகள் வாழ்ந்தோன்

ஒப்பற்ற முறையில் சீருடன் வாழ்ந்தோன்

ஓயாதுழைத்துப் பெரும் புகழ் பெற்றோன்

ஔவை மொழிப்படி அறநெறி ஒழுகினோன்

இஃது எவரும் அறிந்திடல் இனிதே.

## சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள்
Kt.C.B.E.B.S. (Lond) (Retired C.C.S)

# அனுப்பிய செய்தி

முதலியார் அத்தியார் அவர்கள் தமிழுக்கும் சைவத்திற்கும் கல்விக்கும் ஆற்றிய தொண்டு அளப்பெரியது. அன்னாரின் மறைவால் நமது சமூகமும் நாடும் பட்ட நட்டம் சிறிதல்ல.

அவர், மேல்நாட்டவரின் நிர்வாகத்திறனையும், கடமை உணர்ச்சியையும் நன்கு உணர்ந்து, அக்குணங்களில் தாமும் திழைத்து, வாழ்க்கையில் பலதுறைகளில் உயர்வுற்ற பெரியார். "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் இலக்கியத்திற்கு இலக்கண உதாரணம் வேண்டுமாயின் அத்தியார் அவர்களை சுட்டுவது மிகையாகாது. நம் நாட்டில் பெரும் பதவிகளில் இருந்து இளைப்பாறியவர்கள் தமது நேரத்தையும் தாம் சேமித்து வைத்த பொருளையும், அறிவையும், அனுபவத்தையும் என்ன துறைகளில் பயன்படுத்துகிறார்கள் என்று ஆராயுங்கால் அத்தியார் அவர்களின் பெருமை ஓர் கலங்கரை விளக்குப் போல் காட்சியளிக்கும்.

அத்தியார் அவர்கள் தாம் செய்யப்போகும் தொண்டின் நோக்கங்களைப் பற்றி பலமுறை என்னுடன் ஆலோசித்ததுண்டு, அப்போது அர்ப்பணஞ் செய்யும் மனப்பான்மை அல்லாமல் "நான், எனது" என்னும் செருக்கைச் சற்றேனும் அவரிடம் கண்டதில்லை. அவரின் உடல், பொருள், ஆவி முழுவதும் தனது சேவையைப் பூரணப்படுத்தும் எண்ணத்தில் ஊறி இருந்தன. அவர் தமது கிராமத்துக்கெனத் தொடங்கிய கல்விக் களஞ்சியம், யாழ்ப்பாணம் முழுவதற்கும் பயன்பட்டு இலங்கைக்குமே ஒரு எடுத்துக்காட்டாகி விளங்குவது ஆச்சரியமல்ல.

செயற்பகரிய செய்த பெரியோரின் வாழ்க்கை நம்மவரை அவ்வழியில் ஊக்குவிக்க ஏதுவாக இருக்க எம்பிரான் அருள் பாலிப்பாராக.

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"*

# கண்ணீர் துளிகள்
## 'நீரூரன்'

முதலியார் அத்தியார் அருணாசலம் அவர்களுக்கு இது நினைவு மலர். ஆம்! நினைவு மலர், இல்லை! இல்லை!!

நாம் எமது கடமைக் கரங்களால் அவரின் கல்லறைமீது தூவும் கறுப்பு ரோசாமலர்! ஆம் ரோசா மலரே!!

நீர்வேலியில் புகழ்பூத்த குடியிற்பிறந்து தான் பிறந்த நாட்டுக்காக தன் உடல் பொருளாவி அனைத்தையும் தத்தஞ் செய்த அத்தியார் அவர்களின் சேவையை நினைத்து நினைத்து தூவுகின்ற மலர்!

பிறரைச் சுரண்டி வாழ்ந்த நாட்டில் சுருண்டு கிடந்த மக்களைத் தட்டி எழுப்பித் தன்னலத்தை மாய்த்து பிறர் நலத்திற்காக உழையுங்கள்! உழையுங்கள்! என்று சீர்திருத்தப் பாதையிலே எம்மை இட்டுச் சென்ற மகான்! மக்களுக்கு தொண்டு செய்யச் சென்ற பாதையில் மக்களுக்காகப் பேசி தன்னுயிரை நீத்தான்!

பலகாலம் நான் இன்னும் வாழுவேன்! அந்தப் பாதையைச் செப்பனிடுவேன்! இந்த வாய்க்காலை வெட்டி வைப்பேன். பாடசாலைச் சிறுவர்களுக்கு விடுதிமண்டபம் ஒன்றை அமைப்பேன். ஐக்கிய சங்கம் முதல் அனைத்தான சங்கங்களனைத்தையும் சீர்திருத்துவேன்! கோயிற் றொண்டுகளை குறையாமல் செய்வேன்! புராணங்களை குளறிக் குளறிப் படிப்பேன் என்ற ஆசைகள் அனைத்துக்கும் காலன் மண்ணைத் தூவிவிட்டான்!

உத்தமனை இழந்தோம்! உழைப்பவனை இழந்தோம்! ஓராண்டு கழித்தும் அவனை நினைத்து கண்ணீர் விடுகின்றோம். உலகில் இதுவரை பிறந்தவர்கள் எத்தனை பேர்? இறந்தவர்கள் எத்தனை பேர்? நேற்றிருந்தவர்கள் இன்றில்லை. இன்றிருப்பவர்கள் நாளை இல்லை. இவர்களுக்கெல்லாமா நாம் அழுகின்றோம். அப்படி அழுவதனால் உலகம் எல்லாம் ஒப்பாரிக் கூச்சலாகிவிடுமே!

சிலர் செத்தால் சந்தோசப்படுகின்றோம். சிலர் செத்தால் என்ன செய்வது என்று சொல்லி விட்டு மறுவேலை பார்க்கின்றோம். சிலர் செத்தால் பரிதாபம்! என்கின்றோம். இன்னும் சிலர் செத்தால் பயப்படுகின்றோம்.

ஆனால் அத்தியார் போன்ற பரோபகாரி, தியாகி செத்தால் நாமும் அவன் கூடச் சாகாமல் போய்விட்டோமே என்று கண்ணீர் விட்டுக் கைகளைப் பிசைந்து கொண்டு, வானத்தைப் பார்த்தால் நிலவும் இருண்டு, வையத்தைப் பார்த்தால் நிலமும் வெடித்து நாம் வடிக்கின்ற கண்ணீர்த்துளிகள் என்றும் வற்றாத ஆறுபோல் குளமாகிட நிற்கின்றோம்.

அத்தியார் என்றவுடனே ஆறதல் காணும் நெஞ்சுக்கு அவியாத நெருப்பைக் காலன் தந்துவிட்டுப் போனானே! அடபாவி!

என்னருமை முதலியாரே! கண்ணின் மணிபோன்ற நின்பேரமக்களை நினைக்கவில்லை. மந்திரபதவி வகிந்த நின் மருமகளை நினைக்கவில்லை. உடன் பிறந்த உன் சகோதரர்களை நினைக்கவில்லை. ஊராரின் தொண்டையே இலட்சியமாகக் கொண்டு அவர்களுக்காய் தொண்டுபுரியச் சென்ற இடத்தில் அந்தக் காலன் உன்னை மயக்கி விட்டான்! மாய்த்து விட்டான்!!

தொழுதகையுளும் பகையிருக்கும் என்ற தூயகுறளுக்குச் சாட்சியாக உன் பகைவர்களே உன்னை நினைத்துக் கண்ணீர் விடுகின்றார்கள். ஊர்த்தொண்டு செய்யப்போய் எத்தனை திட்டுக்களையும் ஏச்சுப்பேச்சுக்களையும் நீ வாங்கினாய் என்பதை உன் நிழல் போல் உன்னைத் தொடர்ந்து வந்த எனக்கல்லவா தெரியும்! அவைகளெல்லாம் உனக்குத் தூவும் நன்மலர்கள் ஆகட்டும்!

உன் பருவத்தை, உன் உருவத்தை, பழைய மாணவர்கள் புனைந்து வைத்த நின் படத்தைப் பார்த்து விம்முகின்றோம்! நின் உடல் வெந்த சாம்பர் வைத்துக்கட்டப்பட்ட சிறிய கல்லறையைப் பார்த்து விடுகின்றோம்! விடுகின்றோம்! கண்ணீர்த் துளிகள்!!

# அஞ்சலி செய்வோம்

மு. புனிதவதி
(அத்தியார் இந்துக்கல்லூரி H.S.C)

1961 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை பேரிடி போன்ற ஒரு செய்தி எட்டியது. நமக்கு அறச்சாலை அமைத்த அறிவுத் தந்தையான முதலியார் அத்தியார் அருணாசலம் தெய்வீகமடைந்துவிட்டார். காலன் யாரைத் தான் விட்டு வைத்தான்? "நேத்திரங் கெட்டவன் காலன் தம்முன் நேர்ந்ததனைத்தும் துடைத்து முடிப்பான்".

"நன்றென்றும் தீதென்றும் பாரான்" எனப்பாரதியார் பாடியவை கருத்தின்றியா? மாணவர்களாகிய எங்களை அச்செய்தி கலக்கிவிட்டது.

"ஆகுவது ஆகுங்காலம் அழிவது அழிந்து சிந்திப் போகுவது அயலே நின்று போற்றினும் போதல் செய்யும்" என்ற கம்பர் வாக்கையும் சென்ற ஆண்டுதானே கற்றோம். ஆயினும் உணர்வுக் கயிற்றால் கட்டப்பட்டிருக்கும் மனம் அப்பிடியிருலிருந்து விடுபடுவது இலகுவான காரியமா?

எனினும் அறிவின் கூர்மை ஒன்றிருக்கின்றதல்லவா? அது மனதின் பிடியை நெகிழ்த்தது. அத்தியார் இறக்கவில்லை. நம் கல்வித் தாத்தா சாகவில்லை. அவர் அமரரானார்: நம்மிடையே வாழ்கின்றார்: வாழ்ந்து கொண்டேயிருப்பார். இவர் எங்ஙனம் சாக முடியும்? அவர் இல்லாமல் போவது எப்படி? இல்லாததொன்றல்லவா மறைவதும் மாய்வதும், என்றும் உள்ளத்திற்கு அழிவே? மறைவேது? "இருப்பதற்கு இல்லாமையில்லை, இல்லாமைக்கு இருப்புக் கிடையாது" (நாஸதோ வித்யதே பாவோ நாபாவோ வித்யத ஸத:) என்பது பகவத் கீதையின் அருமை வாக்கியம். ஜான் ஸ்டுவர்ட் மில், "சாக்கிரடீஸ் வாழ்ந்து முடிந்துவிட்டானென்று உலகம் எண்ண முடியாது" என மகான் சாக்கீரடீஸைக் குறித்துச் சொன்னதைப் போல் நம் நீர்வைத் தந்தையை நீர்வை மக்கள், ஏன் இலங்கை வாசிகளே சுலபமாக கூறமுடியாது. பூதங்களின் சேர்க்கையால் ஆக்கப் பெற்ற இவ் ஊன்உடல் அழிந்த போதிலும் அவர் அமரராகி நம்முடன் வாழ்ந்து கொண்டே இருக்கின்றார். அவரை மானசீகமாகவே காணவேண்டும். மானசீகமாகக் கண்டு அஞ்சலி செய்யவேண்டும். அவருடைய அன்புக்குப் பாத்திரமாக வேண்டும். இதுவே நம் கடமை.

ஒருவருடைய அன்புக்குப் பாத்திரமாக வேண்டுமேயானால் அவருடைய குணங்களைப் பாராட்டி அவர் அவர் விருப்பத்திற்கான செயல்களில் ஈடுபட வேண்டும். இதுவே நாம் அவருக்குச் செலுத்தக் கூடிய முதல் அஞ்சலியாகும்.

ஒருவருடைய பெருமைக்கும் சிறுமைக்கும் அவரவர் கருமமே குன்றின் மேலிட்ட விளக்கைப் போல் அவர் பெருமையைத் துலக்குகின்றது. பொருள் தேடுவது இக்காலத்தில் சுலபமான காரியமன்று. தேடிய பொருளை தானம் செய்து தரும வாழ்வு வாழ்வது இக்காலத்தில் மனிதன் நினைக்காத ஒரு காரியமாக இருந்து வருகின்றது. அவ்வாறிருக்க நம்தந்தை அயராது உழைத்து, அரும்பாடுபட்டு பொருளைச் சேர்த்து சுகபோகமாக உல்லாச வாழ்வு வாழ எண்ணவில்லை. மனைவி மக்களுக்காக பதுக்கவும் எண்ணவில்லை. மேலும் கடன்பட்டார் எதற்காக? நாம் எல்லோரும் கல்வியறிவால் மேன்நிலை அடையவேண்டும் என்பதே அவரின் ஒரேயொரு ஆசை. தான் பெற்ற இன்பம் இவ்வையகம் முழுவதும் பெறவேண்டும் என்பதே அவர் இலட்சியம். அவர் உழைப்பின் பயனே இன்று நம் கிராமத்தின் மத்தியில் அவர் பெயர் கொண்டிலங்கும் இக்கல்லூரி, ஆசிரியர்களையும், கலைஞர்களையும் கலை விற்பன்னர்களையும் ஆயிரக்கணக்கில் தோற்றுவித்து நீர்வையின் புகழை இலங்கைத்தீவு முழுவதும் பரப்பிக் கொண்டிருக்கும் இவ் ஸ்தாபனம். "அன்னசத்திரங்கள் ஆயிரம் அமைப்பதிலும் ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் மேல்" எனக் கண்டனர் சான்றோர். அங்ஙனமாக ஆயிரக் கணக்கான ஏழைகளுக்கு எழுத்தறிவித்த மேலவரன்றோ நம் அறிவுத் தந்தை. அவருடைய வள்ளற்றன்மைக்கு, அவருடைய உயர்ந்த குணத்திற்கு ஈடு இணையேது? நம் கிராமத்தில் அவருடைய உதவிபெறாத ஸ்தாபனம் ஒன்றுமில்லை. பொதுமக்கள் நலனுக்காக நம் கிராமத்தில் இயங்கும் இயக்கங்களெல்லாம் அவருடைய சேவையில் அலர்ந்து கனிந்த கனிகளாம்.

இவை யாவற்றையும் பெற்று வாழும் நம் நன்றியறிவு உடையோராய், அவருடைய நற்குணங்கள் பொருந்தப் பெற்றவராய் என்றும் வாழ்ந்து அவரது இலட்சிய அமைப்பான அவர் தம் கல்லூரியை மென்மேலும் வளர்ப்போமாக. அதுவே நாம் அவருக்குச் செலுத்தும் பூரண அஞ்சலி. மாணவர்களாகிய நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து அவ் அஞ்சலி செய்வோமாக.

# அத்தியார் அவர்களின் சைவப் பண்பு

## பிரம்மஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள் அவர்கள் அச்சுவேலி

சீலத்தாலும் சுத்தத்தாலும் அறிவாலும் சிறந்து விளங்கி அண்மையில் அரனடி சேர்ந்த முதலியார் அத்தியார் அருணாசலம் அவர்கள் பேரில் நினைவு மலரொன்று வெளியிட அபிப்பிராயப்படுவதால் அதற்கோர் கட்டுரை எழுதி அனுப்பி வைக்குமாறு மலர் வெளியீட்டுப் பொறுப்பாளர் கேட்டுக் கொண்டார்கள். ஸ்ரீமான் அத்தியார் அருணாசலம் அவர்களின் ஞாபகார்த்தமாய் இந்த மலரை வெளியிட முன்வந்த சமஸ்தருக்கும் எமது நன்றியையும் ஆசியையும் முதலில் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திரு. அத்தியார் அருணாசலம் அவர்களை பல வருடங்களாக நன்கு அறிவோம். இவர் பொதுநல சேவையிலும் சமயத் தொண்டிலும் சிறப்புற்றவர் சைவ ஒழுக்கத்தில் திறம்பாதவர். தூய ஆகார நியமமுடையவர். சந்தியா காலங்களில் தேவாராதி அருட்பாக்களை யோதிச் சிவவழிபாடு செய்பவர். புராணபடலத்தின் பயனை உணர்ந்து ஆலயங்களில் கந்தபுராணம் முதலிய புராணங்களை படித்தலிலும் படிப்பித்தலிலும் முற்பட்டு நிற்பவர். விதிப்படி உற்சவம் செய்பவர்களுக்கும் செய்விப்பவர்களுக்கும் பாவம் நீங்கும்: ஞானமுண்டாகும்: எல்லா மங்கலமும் உண்டாகும் என்னும் உண்மையை உணர்ந்து, ஆலய உற்சவங்கள் கிரமமாக நடக்க வேண்டும் என்னும் அவாவுடையவராய் அவற்றிலூக்கமும் உதவியும் கொடுத்து வந்தவர். கொழும்பு சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலின் தர்மகத்தாவாக இருந்தவர். விருந்தினர் பேணும் அருங்குண முடையவர்.

இத்தியாதி நல்லவனாகிய குணங்களின் உறையுளாக விளங்கி நன்மதிப் போடிருந்த முதலியார் அவர்களின் ஞாபகமாக மலர் வெளியிடுதலும் பிறவும் அவசியம் செய்யத்தக்கனவாகிய நற்பணிகளாம். எல்லாம் வல்ல இறைவன் அருள் முன்னிற்பதாக.

## நம்மை விட்டுப் பிரிந்த நல்லவர்

மு. கனகசபேசன் அவர்கள்
(கணக்குப் பரிசோதகர் அலுவலகம் கொழும்பு)

உலகிலே மனிதப்பிறவி எடுத்தவர்களில் தன் கடமை எது என்று உணர்ந்தவன் அறிவாளி. கடமையைச் செய்ய முயல்பவன் திறமைசாலி. கடமையைச் செய்பவன் நல்லவன். இந்த நல்லவர்களின் வரிசையில் முதலியார் அத்தியார் அருணாசத்தையும் ஒருவரென்று கூறுதல் மிகையாகாது.

ஒருவன் தன் கடமை எது என்று உணர்ந்து அதைச் சரிவரச் செய்வதற்கு கல்வியறிவு அத்தியாவசியம் என்பது அவருடைய அகக்கண்ணில் பிரதிபலித்தது. நீர்வேலி மக்கள் கேடில்லாக் கல்விச் செல்வத்தைக் கசடறக் கற்று, கற்றவாறே ஒழுகி, புல்லறிவைப் போக்கி, புனித வாழ்வு வாழக் கல்வியும் கேள்வியும் கண்ணின் மணிகள் என்பதைத் தன் அடிப்படை அத்திவாரமாக அமைத்து நீதிக்கும் நியாயத்திற்கும் கட்டுப்பட்டு கடமை என்ற தூய்மையான பாதையில் மெல்ல அடி எடுத்து நடக்கத் தொடங்கினார்.

இவர் முன்னடி எடுத்து வைத்து நடக்கத் தொடங்கிய புனித பாதையிலே பல எதிர்ப்புக்களும் இன்னல்களும் இடைமறித்தன. அவைகளை எல்லாம் தன் மதியால் வென்று இலட்சியத்தைத் திறமையாக நிறைவேற்றினார் என்பதற்கு இன்று நமது கிராமத்திலே "அத்தியார் இந்துக் கல்லூரி" என்ற பெயருடன் திகழ்ந்து கொண்டிருக்கும் கலைக்கூடம் ஓர் பக்குவமான எடுத்துக்காட்டு.

இக்கலைப் பள்ளியில் பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் புகுமுக வகுப்புவரை அமைத்து நீர்வேலி மாணவ மாணவிகள் மட்டுமன்றிப் பிற ஊர் மாணவ மாணவிகளும் கல்வி பயிலக் கூடியதாக வகுத்து வைத்தார். இது மாணவ சமுதாயத்திற்கு அவர் செய்த மறக்க முடியாத அரும்பெருந் தொண்டு.

இன்னும் கடவுளை வணங்காதார், கடவுட் சிந்தனை இல்லாதார் பிறவிப் பெருங்கடலை நீந்தவோ, மறலியை மதியால் வெல்லவோ, அல்லது மனக்கவலையை மாற்றவோ முடியாது என்ற வள்ளுவன் வாக்கியத்திற்கமைய சித்தத்தைச் சிவன்பால் வைத்த

சிவனடியார்களைச் சிவன் என்று போற்றும் சிந்தை உள்ளவராகவும் வாழ்ந்தார்.

ஆலயங்களில் நடைபெறும் அலங்காரத் திருவிழாக்களை அகற்றி பக்திப் பூஜைகளிலும் பஜனைகளிலும் முக்கிய பங்கெடுத்து "கற்க கசடற கற்றவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்ற சொற்களுக்கமைய தான் கற்ற கல்வியை இறைவனுக்காக வேண்டிய நேரத்தில் பயன்படுத்தியது அவரின் பக்தித் திறனைப் படம்பிடித்துக் காட்டுகின்றது.

நீர்வேலியிலே பிறந்து, நீர்வேலியிலே வளர்ந்து, நீதி நூல்களைக் கசடறக் கற்று, கற்றவாறே ஒழுகி, கருணையும், காண்பவரைக் கணிக்கும் கருத்தழகுள்ளவராகவும் திகழ்ந்து, நேர்மையுடையவர்களுடன் பழகி, நல்லதைச் செய்து, கற்றவரையும் மற்றவரையும் சமமாக நடத்தி, அகம் என்னும் மலரில் அன்பெனும் தேன் நிறைத்து வந்தாரை வரவேற்று. இல்லை என்னும் சொல்லகற்றி, பொங்கிவரும் பொது நலத்தைப் பேணி, சமுதாய முன்னேற்ற வளர்ச்சிக்காகத் தன் உடல் பொருள் அர்ப்பணித்து, தனக்கென வாழா பிறர்க்கென வாழ்ந்த முதலியார் அத்தியார் அருணாசலம் அவர்கள் திணைத்துணை நன்றியையும் பனைத்துணை கொள்ளும் பெற்றி வாய்த்தவர். காலத்தில் செய்த நன்றியை ஞாலத்திலும் மறவாத நல்லறிஞர். அவர்களின் மறைவு எமது கிராமத்திற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு என்பதை மாசற்ற மனதுடைய மனிதர்கள் இன்று நினைந்து நினைந்து நெஞ்சம் உருகின்றார்கள்.

இறைவன் மேல் வைத்த அணையாத அன்பு, கடமைமேல் வைத்த கருத்துக் குறையாத கவனம் இவரை உல்லாச வாழ்க்கைக்கு நாடவிடாது, எளிய வாழ்க்கையிலேயே தடைபோட்டு வைத்திருந்தது. இதற்கு அவர் கனவிலும் கவலைப்பட்டாரல்லர். வாழை குலை சாய்த்து, வந்தவரை வரவேற்கும் நீர்வையூரிலே சைவமும், கல்வியும், இருசமநதிகளாகப் பெருக்கெடுத்து ஓடச்செய்ய வேண்டியது தன் கடமை என்று உணர்ந்தார்: செய்ய முயன்றார்: செய்து முடித்தார் இதனால் முதலியார் அத்தியார் அருணாசலம் அவர்கள் சிறந்த அறிவாளி, திறமைசாலி, நல்லவர் என்று கூறுவதில் யாதும் ஐயமுண்டோ?

# அத்தியார் ஓர் பரோபகாரி

## திரு. தி. முருகேசபிள்ளை அவர்கள்

(காரியாதிகாரி, வவுனியா)

அளவிற் குறுகிய உயரந்தான். ஆனால் அழகிய முகப் பொலிவு நிறைந்த தோற்றம். பாசத்தை நீக்கி பரிசுத்தத்தைப் பிரதிபலிக்கும் சிவ சின்னமாகிய தூய வெண்ணீறு நெற்றியிலே துலங்கும். ஞானக்கண்ணாகிய சந்தனப் பொட்டு உள்ளத்தைக் காட்டும். தமிழ் முதலியார்களின் தலைப்பாகை, தலையை அலங்கரிக்கும். நீண்ட "கோற்" அங்கி அணிந்து என் காரியலயத்திறற்கு அடிக்கடி வந்த முதலியார் அத்தியார் அருணாசலம் சமாதான நீதிபதி அவர்களின் நினைவு என்றும் என் மனக்கண்ணை விட்டு அகலமுடியாதது. அவர் பூதவுடலையும் அலங்காரத்தையுமிட்டு யான் எதுவும் சொல்ல வரவில்லை.

அத்தியார் அருணாசலத்தின் புகழுக்கேதுவான செயல்களையே இப்பொழுது நாம் ஞாபகப்படுத்த வேண்டும். உயரத்திற் குறுகியவராய் இருந்தும் உள்ளத்தால் உயர்ந்தவர் என்பதனை அவர் உருவாக்கிய நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியைக் கொண்டும், அதன் உயரத்தைக் கொண்டும் அளவிடலாகும்.

பொதுநல சேவையையும் கிராம முன்னேற்றத்தையும் பற்றி அன்னார் எனக்கு அடிக்கடி விடுத்த வேண்டுகோள்கள் இன்றும் என் ஞாபகத்திற்கு வந்து கொண்டே இருக்கின்றன.

தெய்வப் புலவர் திருவள்ளுவரின் திருவாக்குகளிற் சில அத்தியார் அருணாசலத்தின் நினைவாகவே எனக்குப் பாடமாயிற்று என்பது மிகையல்ல.

*"தோன்றிற் புகழொடு தோன்றுக"*

என்னும் வள்ளுவர் வாக்கிற்கு இலக்கியமாயமைந்தவர் முதலியார் அத்தியார் அருணாசலம் J. P. அவர்கள். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாய் வாழ்ந்து அந்த வாழ்க்கையில் மண்ணுலகை நீத்துப் புகழுடம்பு பெற்றவர்.

*"தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு*
*வேளாண்மை செய்தற் பொருட்டு"*

என்றெண்ணித் தம் பொருளெல்லாம் தாம் ஸ்தாபித்த நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கு அர்ப்பணித்து அதனால் மகிழ்ச்சியும் புகழ்ச்சியும் பெற்றார்.

*"பயன்மர முள்ளூர்ப்பழுத்தற்றாற் செல்வம்*
*நயனுடையான் கட்படின்"*

என்ற இலக்கணத்திற்கமைந்த பரோபகாரியாக எம் மனக்கண் முன் என்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் இப்பெரியார் தாம் வாழ்ந்த நீர்வேலிக்கு வைத்த மணிவிளக்கு என்றும் அணையாததாய் துலங்கும்.

சங்கர பண்டிதரால் புகழ் பெற்ற நீர்வேலி, அன்னாரின் முயற்சியால் ஓர் சைவப்பாடசாலையையும் பெற்றது. சங்கர பண்டிதரின் மக்கள், தந்தை தந்த பாடசாலையைத் தம்மால் இயன்றவரை நடாத்தி ஏனையோர் கடன்காரர்களாகினதே எடுத்த பயன்.

அக்காலத்தில் மிஷனரிமாரின் செல்வாக்குப் பெருகி கல்வி, மிஷனரிமாரின் வியாபாரப் பொருளாய் இருந்த காலம். கல்வியின் பெயரால் மிஷனரிமார்கள் மனமாற்றம் செய்து கொண்டிருந்தனர். இத்தருணத்தில் தான் சங்கரபண்டிதரின் மக்கள் கடன் காரணமாக தம் கலாசாலையை மிஷனரிமாருக்கு கையளித்துவிட விரும்பினர். இதனையறிந்தார் அத்தியார் அருணாசலம். விரைந்தோடிக் கொழும்பில் இருந்து தம் சொந்த ஊருக்கு வந்தார். சங்கரபண்டிதரின் சந்ததியாரைச் சந்தித்தார். கடனைக் கொடுத்தார். கல்லூரியைக் கையேற்றார். உழைத்த உழைப்பெல்லாம் உனக்கே என்று அக்கல்லூரிக்கே தம் உழைப்பெல்லாம் தந்து மகிழ்ந்தார்.

வண்ணை ஆறுமுகநாவலர் சைவத்திற்கும் தமிழுக்கும் கல்விக்கும் பரோபகாரம் செய்யக் கங்கணம் கட்டிய இலட்சியத்தை நீர்வேலியிலே கையேற்ற பரோபகாரியான உத்தமர் தான் முதலியார் அத்தியார் அருணாசலம் J. P. அவர்கள்.

சமூக சேவையிலும் பொதுநலப் பணியிலும் அவரது துடிதுடித்த உள்ளம், நீர்வேலிப் பகுதிக்கு அவர் செய்த சேவை அவரது பரோபகார சிந்தைக்கு எடுத்துக்காட்டாகும். எம்மவர் எல்லார்க்கும் அது ஒரு முன்மாதிரியாகும்.

பொருள் வருவாயையே தலைமையாகக் கொண்டு அவர் வாழ்க்கை நடத்த வில்லை. "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் அப்பர் திருவாக்கிற்கு அவரை இலக்கியமாகக் கூறலாம்.

அத்தியார் அருணாசலத்தின் பரோபகார சிந்தையை மதித்த அரசாங்கம் அவருக்கு முறையே முகாந்திரம், முதலியார் சமாதான நீதிபதி ஆகிய பட்டங்களை அளித்துக் கௌரவித்தது முதலியார் அவர்களோடு நீண்ட காலமாக எனக்குத் தொடர்பும் நட்பும் இருந்து வந்தது. அது சமூக சேவை சம்பந்தமான கடமைகளிலே எனக்கு உதவியாயிருந்தது. எனது தாராள மனப்பான்மையை விரிவடையச் செய்தது. பரோபகாரச் சிந்தனையை மேலும் தூண்டியது.

பிறவிக்கு ஒரு நோக்கம் உண்டு என்பது சைவ ஐதீகம்.

*"வினைப்பயனே ஒரு நோக்கம் கண்டாய், இந்த வினை*
*தானொழிந்தாற் திணைப்போதளவு நில்லாது கண்டாய்"*

என்பது ஆத்மீக ஞானிகளின் தெய்வீக அனுபவம்.

பரோபாகரி அத்தியார் அருணாசலத்தின் பிறவிக்கு இருந்த நோக்கம் நீர்வேலி அத்தியார் இந்து கல்லூரியை ஸ்தாபித்து வளர்த்து அதைத் தகுந்தவர்களிடம் ஒப்படைப்பது அந்தப் பொறுப்பை இப்பொழுது அரசாங்கம் ஏற்றுக்கொண்டது.

முதலியார் அமைத்த மணிவிளக்கு இனி நீர்வேலியில் மங்காது அது "அத்தியார் அருணாசல மத்திய மகாவித்தியாலய" மாகும் நாள் அதிக தூரத்தில் இல்லை. முதலியார் அத்தியார் அருணாசலம் சமாதான நீதிபதி அவர்களின் ஆதமா சாந்தி அடைவதாக.

*அவரது பரோபகார சிந்தை வாழ்க.*

# அத்தியார் எங்கள் கல்வித் தாத்தா

கு. தியாராஜசர்மா அவர்கள்
(நீர்வேலி அ. இ. கல்லூரி)

ஈழத்தில் இணையற்ற எழிலுடன் விளங்கும் சிறு கிராமங்களில் நீர்வையும் ஒன்றாகும். இக்கிராமம் பல்லோரும் போற்றும் படியாகப் பல்வளமும் பெற்றுத் திகழ்கின்றது. இதன் எழுச்சிக்குப் பேருதவி புரிந்தவர் முதலியார் அத்தியார் அருணாசலம் ஆவார். இப்பெரியார் தாம் பிறந்தவிடத்தைப் பெருமிதமாகப் போற்றினார். தமது கிராமத்தின் சீர்கேடான நிலைகளைச் சீர்படுத்த முயன்றார். கிராமச் சீர்திருத்தத்தின் பொருட்டு அவர் செய்த முதற் பெருமுயற்சி "கல்வி புகட்டல்" எனலாம்.

1885 ஆம் ஆண்டு நீர்வையில் பிறந்த இப்பெரியார் இளமையிலேயே ஆங்கில அறிவு பெற்ற ஆங்கிலேயர் சிலருடைய நட்புடன் கொழும்பு மாநகரில் உள்ள கொம்மேஷல் கம்பனியிற் கடமையாற்றினார். அங்கு கண்ணியமும், கட்டுப்பாடும் உடையவராகக் கடமையாற்றி உயர்விடம் பெற்றார். அதனால் வந்த ஊதியத்தை அறவழியிற் செலவிட எண்ணி தம் கிராமத்திலே ஒரு கல்லூரி எழுப்ப முயன்றார். மாந்தர் பெறும் செல்வங்கட்கெல்லாம் தலையாய செல்வம் கல்விச் செல்வம் என எண்ணித் தம் கிராம மாந்தர்கட்குக் கல்வியில் ஆர்வமூட்ட முயற்சிகள் செய்தார். அப்பெருமுயறச்சியினை ஆரம்பிக்கும் பொருட்டு நீர்வை சங்கரபண்டிதர் பாடசாலையை விலை கொடுத்துப் பெற்றார். அக்குறுகிய நிலப்பரப்புப் போதாமையினால் அயலிற் சூழவுள்ள பாகங்களையும் பெற்றார். சங்கரபண்டிதர் பாடசாலையை இலட்ச ரூபாய் செலவிட்டு அத்தியார் இந்துக் கல்லூரி என்னும் பெயருடன் பெரும் கல்விக் கூடமாக விளங்கும்படி செய்தார். இப்பெரியார் ஒரு சிறுபாடசாலையை இத்தகைய ஓர் உயர்விடத்தைப் பெறும் பொருட்டுச் செய்த தொண்டு சிந்திக்கற்பாலது.

அவர் தம் அயராத உழைப்பினாலும், ஊக்கத்தினாலும் நூலகம் இயங்க ஆரம்பித்தது. அவர்தம் கல்விச் சேவையால், அஞ்ஞானத்தால் சூழப் பெற்றிருந்த நீர்வையும், அதன் அயற் கிராமங்களும் அறிவொளி பெற்றுத் திகழ ஆரம்பித்தன. இத்தகைய பெருமுயற்சியில் நம்

தாத்தாவாகும் முதலியார் அத்தியாரவர்கள் ஈடுபட்டதனால் தமது ஒப்பற்ற வசதியான வாழ்வினைப் புறக்கணித்தார். தமக்கென ஓர் உரிய இல்லமின்றிப் பல்லாண்டு காலமாக பண்புடன் வாழ்ந்தார். எனின் அவர் தம் வாழ்வு ஆராய்ந்து சிந்திக்க வேண்டியதன்றோ? இந்நிலையிற்றான் வள்ளுவன் கூறும் "அன்புடையான் என்பும் உரியர் பிறர்க்கு" எனும் அருமையான குறளடிகளும், "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" எனும் எழில் மிகு அடிகளும் ஞாபகத்திற்கு வருகின்றன.

கல்விக் கூடம் அமைத்து அதனை செவ்வனே சிறப்புற நடாத்த எண்ணிய பெரியார், கொழும்பினின்றும் பிறந்த கிராமம் அடைந்தார். தம் கிராமம் கல்வியில் மேன்மையுற எத்தகைய முயற்சிகளைச் செய்தாரோ அதேபோல் மற்றும் பல்வேறு வழிகளிலும் மேல்நிலையுடைய வேண்டிப் பலசங்கங்களிலும் ஈடுபாடுடைய வரானார். அதன்மூலம் பொதுஜன சேவைகளை ஆற்றினார். அதனால் பொதுஜனங்களின் அன்பிற்கும் பேராதரவிற்கும் ஆளானார் பல்லாண்டுகளாக தம் கிராமச்சங்கத்தில் தலைவராக விளங்கி அரசினது உதவியுடன் நூல் நிலையங்களும்ம், தெருக்கள், வாய்க்கால்கள் போன்றனவும் ஏற்படுத்தி நீர்வையினை நிகரற்ற ஓர் உயர் ஸ்தானத்திற்குக் கொண்டு வந்தார்.

கிராமச் சங்கத் தலைவராகவும் நீர்வையின் ஒரே கல்விக் கூடத்தை நிறுவிக் கிராமமக்களை நல்லறிவு பெறச் செய்தவராகவும் விளங்கிய இப்பெரியார் இறுதியில் அரசாங்சக நன்கொடையையும் பெற்று தம் கல்லூரியில் விஞ்ஞானம், கலை ஆகியன நன்னிலையடையவும் பேருதவி புரிந்தார். இவர் அரும்பெரும் முயற்சியால் கல்லூரி இரண்டாம் பகுதியினைச் ('B'grade) சேர்ந்ததாக அரசினரால் உயர்த்தப்பட்டது. இவர் செய்த பல்வேறு சேவைகளையும், பொதுஜன ஆதரவினையும் அறிந்த அரசாங்கம் 1960 ஆம் ஆண்டு நீர்வையின் சமாதான நீதவானகாவும் இவரைத் தெரிவு செய்தது. இத்தகைய அரும்பெரும் முயற்சிகளைச் செய்து அரசினரதும், மக்களினதும் ஒருப்பட்ட ஆதரவிற்கு ஆளான இப்பெரியாரை வாழ்த்திக் கொம்மேஷல் கம்பனியாரும் பொதுச் சேவைகளுக்கு செலவிடுவதற்கென மாதந்தோறும் குறித்த தொகைப் பணம் உதவினர்.

இங்ஙனமாக இப்பெரியார் தம் வாழ்வினை ஒரு பொருட்டாக மதியாது கல்வி வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டினால் இவரை இன்றைய மாந்தர் "அத்தியார் எங்கள் கல்வித் தாத்தா" என அன்புடன் போற்றுகின்றனர். அன்றியும் அவர்தம் அயராப் பெருமுயற்சியினால் பெரு வளர்வுற்ற நீர்வை இன்று அயற்கிராமத்தினரால் "நீர்வை நகர்" எனப் பெரிதாகப் போற்றப்படுகின்றது. எனின் நம் கிராம நல்வளத்தையும், அவ்வளப்பத்திற்கு உறுதுணையாயிருந்த பெரியார் முதலியார் அத்திரர் அருணாசலம் அவர்களையும் நாம் என்றும் போற்றாதிருக்க முடியாது. ஆதலின் அப்பெருந்தகையாம் முதலியார் அத்தியார் அருணாசலம் அவர்கள் தம் மறைவு நம் வருங்கால பெருவளர்ச்சிக்கு இக்கட்டான நிலையை ஏற்படுத்தி விட்டதெனலாம்.

## அத்தியார் அருணாசலம்

பேரும் புகழும் பெற்றுப் பொது நோக்குடன் மக்கள் சேவையே தனது குறிக்கோளாகக் கொண்டு இவர் வாழ்ந்தார்.

சாந்தம் தவழும் சிரித்த முகமும், தலையில் உள்ள தலைப்பாகையும், கையிலே உள்ள தடியும் அவர் நினைவை என்றுமே மாற்ற முடியாதவை. மறக்க முடியவில்லை அன்றைய முதற் சந்திப்புத்தான் கடைசிச் சந்திப்பாகவே அமையும் என்று கண்டிருந்தேனானால் அன்றே மறந்திருக்க முயற்சித்திருப்பேன். எதிர்பாராத விதமாக விளைந்த மாற்றத்தால் அதுவே கடைசிச் சந்திப்பாக அமைந்து விட்டதால் அவரை மறந்து விட முடியவில்லை. என்னை மறந்தாலும் கூட!

*வணக்கம்*

**க.மகாலிங்கம்**
**யாழ் இள. எழு. சங்கம்.**

## அத்தியார் வரலாற்றுரை
### மாணிக்கம் வைத்திலிங்கம் அவர்கள் எழுதியது

முதலியார் அத்தியார் அருணாசலத்தைப் பற்றிச் சில வரிகள் எழுதச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அவர் எனது பிறந்த ஊரைச் சேர்ந்தவரென்பதும் இதற்கொரு காரணமாகும்.

1927 ஆம் ஆண்டு முதன்முதல் அவரை நான் கொழும்பிற் சந்தித்தபோது கொழும்பு கொம்மேர்சியல் கம்பனியில் பொறுப்புக்கும், நம்பிக்கைக்கும் பாத்திரமான பிரதம ஸ்ரோர் கீப்பராகக் கடமையாற்றினார். வசதியான முறையிலும் வைதீகப் பண்போடும் தான் நீதிமுறையில் சம்பாதித்த சில ஆயிரம் ரூபாக்களுடனும் கவலையற்ற வாழ்க்கை நடத்தினார். விரும்பியிருந்தால் இந்தப் பணத்தைப் பல்மடங்காகப் பெருக்கியிருக்க முடியும். ஆனால் தம் பிறந்த ஊரான நீர்வேலி மக்களுக்கும் அவர்களது எதிர்காலச் சந்திக்கும் பலனளிக்கும் வகையில் தம்மால் இயன்றளவு தொண்டு செய்ய விரும்பினார். எனவே சங்கரபண்டிதர் பாடசாலையை வாங்கிப் பெரும்பணச் செலவில் புதிய கட்டிடங்களை அமைத்து அத்தியார் இந்துக்கல்லூரியை நிறுவினார் முதலியார் அவர்கள். இன்று பெருமையுடன் ஓங்கி நிற்கும் இந்தக் கல்விக்கூடம் என்றென்றும் அவரது உதார குணத்திற்கு ஒரு ஞாபகச்சின்னமாய் விளங்கிக் கொண்டிருக்கும் என்பது உறுதி.

திரு.அத்தியார் அவர்களின் உத்தியோக வாழ்வில் அவரது திறமை ஒரு எடுத்துக்காட்டாக இருந்தது. கடும் உழைப்பும் ஏராளமான தொழிலாளரைக் கட்டுப்படுத்துவதில் அவர்காட்டிய திறமையும் அவரது நேர்மையும் முதலாளிமார்களுக்கு அவரிடத்தில் பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தது. அவருடைய உத்தியோக காலம் முழுவதும் இந்த நம்பிக்கை தொடர்ந்து நீடித்து வந்தது அவர் பெருமைக்கு ஒரு சான்றாகும்.

ஒரு சமயம் முதலியார் அவர்களின் அழைப்பின் மீது பிரதம எஞ்சினியரும் எஞ்சினியரின் பகுதித் தலைவருமான திரு, (C.C.Stephen) ஸி.ஸி.ஸ்ரீபன் நீர்வேலிக்கு விஜயம் செய்திருந்தார். அவர் கொழும்பு திரும்பியதும் "உங்கள் கிராமமான நீர்வேலியில் இயற்கை அன்னை பூரணமாகக் கொலுவீற்றிருக்கின்றாள். உங்கள்

மக்களும் விருந்தோம்பலுக்கு உதாரணமாய் திகழ்கின்றார்கள். இந்த வனப்பான பூங்காவில் வாழக் கொடுத்து வைத்த நீங்கள் எல்லோரும் பாக்கியசாலிகள்" என்று என்னிடம் புகழ்ந்துரைத்தார். இதன் மூலம் நீர்வேலியின் பெருமை இதர ஐரோப்பியர்களுக்கும் தெரியவந்தது.

திரு அத்தியார் அருணாசலம் தனது சகாக்களிடையே ஒரு நந்தா விளக்காகத் திகழ்ந்தாரென்பது என் சொந்த அபிப்பிராயம் ஆகும். எத்தனையோ இளைஞர்கள் உத்தியோகம் பெறுவதற்கு முதலியாரவர்கள் உதவி புரிந்திருக்கின்றார்கள். அவர் உத்தியோகத்தை விட்டு விலகியபோது கொம்மேர்சியல் கம்பனியின் சரித்திரத்திலே முதன்முதலாக ஆயுட்கால இளைப்பாறும் சம்பளம் வழங்கப்பட்டது. இப்பெருமை அவருக்கும் அவரது உறவினருக்கும் மட்டுமன்றி ஊரில் உள்ள எவரையும் சார்ந்ததாகும்.

முதலியார் தனது கல்விக்கழகத்தின் பொறுப்பை ஏற்றவுடன் அவருடைய வாழ்க்கையில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. இந்த ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்காக அவர் பல தியாகங்களைச் செய்ய வேண்டியிருந்தது. இக்கட்டத்தில் அன்னாரின் வாழ்க்கையில் நடந்த ஓர் சம்பவத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். தனது கல்லூரி சம்பந்தமாக அவர் நீர்வேலிக்கு விஜயம் செய்திருந்தார். தம் அலுவல்களை முடித்துக் கொண்டு கொழும்புக்கு ரெயில் மூலம் பிரயாணம் செய்வதென்பது ஏற்பாடு, ரெயில் புறப்பட சிறிது நேரமாயிருந்ததாலும் வாகனவசதி அச்சமயம் கிடைக்காமல் இருந்ததாலும் நாவற்குளி புகையிரத நிலையத்திற்கு வயல்களினூடே நடந்து சென்றார். பிளாட்பாரத்தில் நுழைந்த சமயம் ரெயில் புறப்பட்டு விட்டது. ஆனால் முதலியார் அவர்கள் ரெயிலுடன் ஓட்டப்பந்தயத்தில் ஈடுபட்டார். அதிஷ்ட வசமாக ரெயிலும் திடீரென நின்றது. ஐந்தடி உயரமான இந்த மனிதர் அப்போது ரெயில்பெட்டிக்குள் குதித்த பாணி உள்ளேயிருந்தவர்களின் கவனத்தை ஈர்க்கும்படி இருந்தது. சில நாட்கள் கழிந்த பின் இச்சம்பவத்தை வருணித்த ஒரு நண்பன், கடைசிக் கட்டத்தில் சவுக்கினால் விளாசப்பட்டு வெற்றியின் இலக்கையடைந்த ஒரு பந்தயக்குதிரைக்கு அவருடைய ஓட்டத்தை ஒப்பிட்டார். அவருடைய கல்விக்கூடம் முதலியாருக்கு ஒரு சவுக்காக இருந்தது என்ற அந்த நண்பர் வருவித்தார்.

மதவாழ்க்கையில் ஓய்வு நேரங்களில் எல்லாம் ஆலயத்தில் இறைவணக்கம் செலுத்துவதிலேயே அவர் நேரத்தைச் செலவிட்டார்ரென்பதை நான் நன்கறிவேன். இன்பத்தையும் துன்பத்தையும் சமமாகக் கருதிய இப்பெரியார் புராணங்களைப் படிப்பதிலும் சிவநாம பஜனையிலும் முக்கிய பங்கெடுத்துக் கொண்டார். கடவுள் பக்தியில் இணையற்று விளங்கிய முதலியார் தினந்தோறும் கொம்பனித் தெருவிலுள்ள சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்குச் சென்று வழிபட்டு வந்ததுடன் அவ்வாலய நிர்வாகத்திலும் முக்கிய பங்கெடுத்துக் கொண்டார்.

அவருடைய விஷேச பழக்கங்களில் நன்றாக உடையணிவதும் ஒன்று. வெள்ளை நிறமுடைய தலைப்பாகையுடனும் நீண்ட கழுத்துப் பூட்டிய கோட், கால் சட்டையுடனும் சேர், பொன்னம்பலம் இராமநாதனை அவர் நினைவுபடுத்தினார். கொழும்பு மக்களிடையே அவர் பிரபல்யமாகியதற்கு இவ்வித கம்பீர உடையும் ஒரு காரணம் எனலாம். மேலும் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி இலங்கை முழுவதும் உள்ள சகல வகுப்பு மக்களிடையேயும் சின்னஞ்சிறு நீர்வேலிக் கிராமத்தை பிரபல்யப்படுத்திய பெருமை திரு. அத்தியார் அருணாசலத்திற்கே உரித்தாகும்.

முதலியார் அத்தியார் அருணாசலம் அவர்களின் மறைவினால் நாம் ஒரு சிறந்த வழிகாட்டியையும் விசுவாசமுள்ள ஒரு நண்பரையும் இழந்துவிட்டோம். இலங்கை மாதாவும் முக்கியமாக நீர்வேலி மாதாவும் ஒரு தியாகியையும் ஒப்பற்ற புதல்வனையும் இழந்துவிட்டாள். இறைவன் அப்பெரியாரின் ஆத்மாவுக்கு சாந்தியளிப்பாராக.

*இத்தரையில் ஆண்டுபல போய்மறைந்தாலும்.*
*இருந்தநிலை மாறிமேல் நிலைவந்தாலும்*
*சத்தியமே துணையாகக் கொண்டுஎன்றுஞ்*
*சமூகமுன் னேறவே பாடுபட்டு*
*உத்தமராய் நாம்வாழ வழிவகுத்தும்*
*உயர்பணி கள்பலநீர் வேலிக்காற்றி*
*அத்தியார்நீர் அகன்றீரோ அல்ல அல்ல*
*அமரனாய் அருணாநீ என்றும் வாழ்க.* *(கே.எஸ்)*

## முதலியாரவர்கள் ஓர் இலட்சிய புருஷன்

**திரு. S.K. கந்தையா அவர்கள் B.A நீர்வேலி**
**(ஆசிரியர், அத்தியார் இந்துக் கல்லூரி)**

"கருமமே கண்ணாயினார்" "எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்" ஆணவமும் மாயையும் இல்லாதவர்களே கர்மவீரர்கள் ஆகின்றனர்: கன்மமற்றவர்களும் ஆகின்றனர். நான் சமய அறிவை நல்லாக விளங்கினவனல்லன். ஆனால் பொது அவதானிப்பில் இருந்து அறிந்ததைக் கொண்டு இப்படிச் சொல்லி முதலியார் அத்தியார் அருணாசலம் அவர்களை "கருமமே கண்ணாயினாரில்" ஒருவர் என்று முதலில் குறிக்க விரும்புகின்றேன்.

உலகின் எல்லாப் பாகங்களிலும் எல்லா நபர்களிலும் ஒரேவித வளர்ச்சி ஒரே காலத்தில் ஏற்படுவதில்லை. ஆணவ அடிப்படையில் கூட்டபிமானங்களை தனிப் பொருளாதார மேம்பாட்டுக்காகத் திரட்டி வளர்த்தனர் பலர் மேலைத் தேசங்களிலே ஆனால் அத்தகைய ஆணவ தேசியங்களிடையே ஆத்மீக பண்பாட்டு வளர்ச்சிக்காக அன்று தொடங்கி இன்றுவரையும் முழுக் காலத்தையும் செலவழித்த தனியார்களும் ஸ்தாபனத்தொடர்புள்ளவர்களும் அங்கும் தோன்ற சிவன் அருளினார்.

இந்த இருதரப்பட்ட வளர்ச்சிகளை (அதாவது கூட்டு வளர்ச்சி, தனி வளர்ச்சி) அடிப்படையாகக் கொண்டே முதலியார் அவர்களின் கர்மயோக வாழ்வை நாங்கள் அவதானிக்க முடியும்.

சூவேஸ் கால்வாய்க்கு கிழக்கே உள்ள நாடுகளில் ஆத்மீக பலம் அதிகமெனச் சொல்லப்பட்டு வந்திருக்கின்றது. உலகத்தின் பிரதான சமயங்கள் ஆசியாவில் தான் உதித்தன. ஆனால் கிறீஸ்த சமயம் ஐரோப்பாவில் பரம்பி மத்தியகால லோகாயத இணைப்புக்களுடன் வர வர ஆத்மீகத்தை மறந்து சீர்கெட்டது.

அக்காலத்தில்தான் கத்தோலிக்க சமயத்தை இலங்கைக்கு போர்த்துகீசர் கொண்டு வந்தார்கள். அன்று தொடக்கம் இலங்கையின் புராதன சமயங்களான சைவமும் புத்தமும் இஸ்லாமும் ஆசியாவெங்கணும் போல இங்கும் அழிவுற்றன.

அவ்வித சூழ்நிலையில் தான் 19 ஆம் நூற்றாண்டின் முடிவிலும் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் அநாகரீக தர்மபாலரும் புத்த

தியோசபிக்கல் (Theosophical) சங்கத்தினரும் புத்தசமய மறுமலர்ச்சியையும் புத்தசமய அடிப்படையில் உள்ள தற்காலிக கல்வி வளர்ச்சியையும் தேசியத்தையும் தொடங்கினர். அதேவித சேவையில் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினரும் ஆறுமுகநாவலர்களும் யாழ்ப்பாண இந்துக் கல்லூரி ஸ்தாபகர்களும் கௌரவ சேர் பொன் இராமநாதன் அவர்களும் யாழ்ப்பாண மக்களிடையே சைவசமய வளர்ச்சிக்கும், தேசியத்திற்கும் தற்கால அறிவு வளர்ச்சிக்கும் அடிகோலினார்கள்.

தமிழ் மக்களின் பாரம்பரியத்தை யொட்டி தற்கால வளர்ச்சிகளை ஏற்படுத்த முயன்றவர்களில் வலிகாமம் கிழக்குப் பகுதியில் இருவரைத் தனிப்பட்டவர்களாக குறிப்பிடலாம். புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியை ஸ்தாபித்தவர் ஒருவர். காலஞ் சென்ற முதலியார் அத்தியார் அருணாசலம் அவர்கள் இன்னொருவர்.

நீர்வேலி நீண்ட காலமாகக் கிராமிய விவசாய அடிப்படையிலேயே நிலைத்திருந்தது. அந்நிலையில் சங்கர பண்டிதர் காலந் தொடங்கிய சைவசமய ஆர்வம் மீண்டும் சக்தி பெற்றது. எனவே நீர்வேலியின் மூன்று பெரும் கோவில்களும் சங்கரபண்டிதர், சிவப்பிரகாச பண்டிதர், ஆகியோரின் சைவப்பாடாசலையையும் கிராம வாழ்க்கையில் சைவசமய பாரம்பரியத்தை நீடித்தன. ஆங்கிலக் கல்வி வேண்டாமென்ற கருத்தும் விவசாய ஆர்வமும் சேர்ந்து சைவாபிமானமாகின.

முதலியார் அவர்களின் இளம் காலத்தில் தமிழின், சைவத்தின் பாரம்பரியத்துடன் ஏற்பட்ட தற்கால ஆங்கிலக் கல்வி இணைப்பும் இலங்கையில் தொடங்கியது. பலருடைய எதிர்ப்புக்கிடையில் முதலியார் அவர்கள் ஆங்கிலம் கற்கத் தொடங்கினார். சைவசமயக் கோட்பாட்டின்படியான பிரம்மச்சரியம், கிருகஸ்தம் ஆகிய இரு காலங்களையும் கூட பழையன காத்து புதியன புகுத்தலாகிய முயற்சிகளுக்காக முதலியாரவர்கள் உபயோகித்தார்.

கோவில்களில் புராணப்படிப்பு, பஜனை, விழாக்கள் ஆகியனவற்றை வலுவடையச் செய்தார். சைவசமய அடிப்படையில் ஆங்கிலக் கல்வியும் தமிழ்க் கல்வியும் வளர அத்தியார் இந்துக் கல்லூரியை ஸ்தாபித்து உதவினார். தனது உயிர்போன்ற தனது கிராம மக்களை பழமையோடும் உலகத்தோடும் ஓரேவேளையில் தொடர்புபடுத்தினார்.

ஆகவே, முதலியாரவர்களின் முழு வாழ்வும் சைவம், கல்வி, தமிழ், தற்கால வாழ்வு ஆகியனவற்றை இணைத்து முயற்சி செய்யும் தியாக வாழ்வு ஆகியது. தகப்பனும் சகோதரனும் சகோதரியுமே இம்முயற்சிகளுக்கு தொடக்கத்தில் உதவினர். அவருடைய மனைவியும் தன் முழு நாட்களையும் அவருடைய இலட்சியங்களை வளர்க்க உதவி. 1940 இல் கடவுளிடம் சென்றார்.

கிராமத்தின் வறிய நிலையும் முதலியாரவர்களுக்குப் போதிய ஆதரவைக் கொடுக்க வசதியளிக்கவில்லை. ஆனால் கடவுள் பக்தியாலும் கொழும்பு கொம்மேர்சியல் கொம்பனியில் ஆங்கிலேயரிடமிருந்தும் சகாக்களிடமிருந்தும் பெற்ற மனோதிடத்தாலும் தனது இலட்சியத்துக்காக நீண்ட காலத் தியாக வாழ்வு நடத்தினார்.

இதன் பலனாக நாட்டின் மாற்றங்களுடன் நீர்வேலிக் கிராமமும் இணைந்தது கிராமத்தின் பிதாவாகவும், தொடங்கிய கருமங்களின் வளர்ச்சியை ஓரளவுக்கு தானே கண்டு பூரித்தவராகவும், வாய்க்கற்றரவை விநாயகரினதும் அரசகேசரிப் பிள்ளையாரினதும் நீர்வேலிக் கந்தசுவாமியார் என அவர் என்போதும் போற்றிவந்த கலியுகக் கடவுளினதும் திருவடிகளைச் சேர்ந்தார். கொழும்பில் கொம்பனித் தெருவிலுள்ள ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவிலிலும் அவர் வழிபாட்டு முயற்சிகளைத் தீவிரப்படுத்தியவர்.

எனது பிதாவை தனது மிக நெருங்கிய நன்மை விரும்பியென அவர் சொல்வதுண்டு. இன்று முதலியாரவர்கள் இலங்கை வாழ் தமிழரின் நன்மைக்காக சிவபிரானிடம் வாதாடிக் கொண்டே இருப்பார். "யாவர்க்குமாம் இறைவர்க்கோர் பச்சிலை" முதலியார் அவர்கள் அடைந்த அருணோதயம் போன்ற ஆத்ம சாந்தியை அவரின் ஞாபகத்தால் நாம் அனைவரும் அடைவோமாக.

அட்டதிக்குப் பாலகரென அவரைச் சூழ்ந்து அன்று வழியனுப்பிய பேரப்பிள்ளைகளும் அவரைப்போல நீர்வை வாசிகளையும் தமிழறிந்த நன் மக்களையும் உலக ஜனநாயக கர்த்தாக்களையும் மனமார நேசித்து வாழ்வார்களென நாம் ஐயுறவேண்டியதில்லை. "இட்டார் பெரியோர்" கெட்டார் பாவிகள். இட்டார் கெட்டாரைப் போஷிப்பதே முதலியாரின் விருப்பமாக இருந்தது

## 'அத்தியார்' அணையாத சோதி

### திரு. கனகசபை சின்னராசா அவர்கள், நீர்வேலி

"அத்தியார்" என்று சொல்லும்போது பொன்னிற மேனியில் வெண்ணீறணிந்து,வெண்துண்டு அரைக்கசைத்த ஒரு கம்பீரமான தோற்றம் நமது மனக்கண் முன் தோன்றும். அந்தத் தோற்றம் "எந்த நேரமும் சமூகத் தொண்டிற்கு நான் தயார்" என்ற வாசகத்தை உள்ளடக்கியதாகவே காணலாம்.

ஒரு சமூக ஊழியனுக்கு அமைய வேண்டிய அரிய குணங்களான பரிவு தன்னலமற்ற தொண்டு, சமநோக்கு, அயரா உழைப்பு, சத்தியம் ஆகியன யாவும் அவருக்கு இயற்கையாகவே அமைந்திருந்தன. உள்ளத்தால் பொய்யாதொழுகிய இவர் சைவம் தமிழ் ஆகிய இரண்டையும் தமது இரண்டு கண்களாகக் கொண்டு அவற்றைச் சிறப்பாகத் தமது கிராம மக்களுக்குப் புகட்டி அதனால் அவற்றை வளர்ச்சியடையச் செய்வதற்கு அவர் ஆற்றிய தொண்டுகள் அளப்பரியன.

இவர் நீர்வேலியில் சைவத் தமிழ்க் குடும்பத்திலே பிறந்து தமது இளவயதிலே தமிழும் ஆங்கிலமும் கசடறக் கற்றார். சைவ சமய நூல்களைக் கற்றுத் தினமும் நற்றாள் தொழுது வருவராயினர். சில காலஞ் செல்ல அத்தியார் அருணாசலம் அவர்கள் கொழும்பு கொமேர்சியல் கம்பனியில் சேர்ந்து வேலை பார்த்து வந்தார். அங்கு அவர் வேலை பார்க்கும் போது இவருடைய விடாமுயற்சியையும் நேர்மைத்திறனையும் அறிந்த கம்பெனியின் வெள்ளைக்கார மேலதிகாரிகள் இவருக்கும் பொறுப்பு வாய்ந்த பல உயர்ந்த பதவிகளைக் கொடுத்து உற்சாகமூட்டினர். இப்படிப் பலகாலம் வேலை பார்த்துப் பின்பு தமது சொந்த ஊராகிய நீர்வேலிக்குத் திரும்பி அங்கு கிராம, சமூக முன்னேற்றங்களுக்கு வேண்டிய பல ஆக்கப் பணிகளில் ஈடுபட்டார்.

தமது கிராம மக்களது முகத்திலிருக்கும் இரண்டு புண்களையும் கண்களாக மாற்றுவதற்காகவும், அருகி வரும் சமய அறிவை வளர்க்கும் நோக்கத்தோடும், கல்வி இல்லாத பேர்களை இல்லாமற் செய்ய வேண்டும் என்ற அரிய குறிக்கோளோடும் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியைத் தற்போதைய நிலையில் உருவாக்கினார். தந்தையார்

ஆரம்பித்த பாடசாலைக்கு இப்போது காட்சியளிக்கும் பெரிய மண்டபங்களைக் கட்டி, கல்வித் தராதரத்திலும் உயர்ந்த கல்லூரியாகவும் ஆக்கிய பெருமை திருவள்ளுவர் அத்தியார் அருணாசலம் அவர்களையே சாரும். இது நீர்வேலியில் மிகப் பெரிய பாடசாலையாகவும் இலங்கையிலேயே சிறந்து விளங்கும் கல்லூரிகளில் ஒன்றாகவும் திகழ்கின்றது. இன்றுவரையும் ஆயிரம் ஆயிரம் மாணவர்கள் கல்விபயில ஏதுவாயிருந்தது மட்டுமல்ல இன்னும் வரப்போகும் எண்ணற்றவர்களுக்கும் கல்வி ஒளி பரப்பக் காத்து நிற்கிறது இக்கல்லூரி. இக்கல்லூரியை ஒரு ஊருணி என்று குறிப்பிட்டால் அது மிகையாகாது. என்னே இவருடைய சேவை! இப்படி ஒரு அரிய தொண்டினைச் செய்யக் கிடைத்ததே அவர் முன்செய்த பாக்கியம் என்றே கூறவேண்டும். அளப்பெரிய சேவையல்லவா பாடசாலை அமைத்தல்.

"எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆவான்" என்பது ஔவைப்பாட்டியின் வாக்கு. ஆனால் எழுத்து அறிவிக்க உதவியவர் நிச்சயம் இன்னும் ஒரு படி உயர்ந்தவராகவே இருக்கவேண்டும். ஆயினும் இறைவனுக்கு மிக்கார் எவரும் இல்லையென்பது சமயக் கொள்கையாதலின் கனம் அத்தியார் அருணாசலம் அவர்கள் இறைவனுடைய நன்மையை அடைகிறார் என்றால் தவறாகாது.

இது மட்டுமல்ல இவர் நீர்வேலிக் கிராமச் சங்கத்தின் அங்கத்தவராகவும் தலைவராகவும் பலகாலம் இருந்து இக்கிராம வளர்ச்சிக்கு அல்லும் பகலும் அயராது உழைத்தார். பிறருடைய கருத்துக்கு மதிப்புக் கொடுத்தல், பாரபட்சமற்ற நிருவாகம் போன்ற சிறந்த அம்சங்கள் பலவும் இவரிடத்தில் காணப்பட்டன. இன்னும் பல்வேறு கூட்டுறவு, கிராம முன்னேற்றத் தாபனங்களில் முக்கிய பங்கு கொண்டு தமது கிராம முன்னேற்றத்திற் காகவும், மக்கள் நலனுக்காகவும் பாடுபட்டார்.

இவர் ஆற்றிய அரிய பொதுநல சேவைகளைக் கவனித்து அரசாங்கம் இவருக்கு முதலியார் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. மேலும் அரசாங்கம் இவரை ஒரு சமாதான நீதவானாகவும் நியமித்தது. எங்கள் கிராமத்திலே அரசாங்கத்தாரால் கௌரவிக்கப்பட்டு சமாதான நீதவானாக நியமிக்கப்பட்ட முதல்வர் இவரே. இவருடைய சிறந்த குணத்தாலும், பண்பாலும் தமது கிராம மக்களிடையே நன்மதிப்பைப்

பெற்றதுமல்லாமல் பிற இடங்களிலுள்ள பலரதும் உள்ளங்களி லெல்லாம் உறைந்துள்ளார்.

இவ்வாறாகத், தமிழ், சமயம் ஆகியவற்றைப் பரப்ப வழி வகுத்தும், தமது கிராம மக்களின் நலனுக்காகப் பாடுபட்டு உடல், உழைப்பு, ஊதியம் அனைத்தையும் அர்ப்பணித்தும், எங்கள் எல்லோருக்கும் வழி காட்டும் ஒளியாக விளங்கிய முதலியார் அத்தியார் அருணாசலம் ஜே.பி. அவர்களை 22.09.1961 காலை காலன் வந்து அழைத்துச் சென்றுவிட்டான். நீர்வேலிக் கிராமம் வளர்ச்சியடையப் பாடுபட்ட இவர் காலன் வயப்படுத்தற்குச் சில மணி நேரத்துக்கு முன்னரும் கூட தமது கிராம மக்களை ஊக்குவிக்க பரிசுகளை வழங்கிக் கொண்டிருந்தார். என்னே இவர் பேறு.

அரை நூற்றாண்டுக்கு மேலாக ஒளியைப் பெற்ற நீர்வேலிக் கிராமம் எங்கும் ஒரே இருள் மயம். இக்கிராமம் தனது ஒப்பற்ற தனயனை இழந்தது. அரிய கல்லூரியொன்று தனது இணைபிரியா முகாமைக்காரனைப் பிரிந்தது. நீர்வேலிச் சிறார்கள் அன்பு பொழியும் தாத்தாவைக் காணாது கலங்கினர். நீர்வேலி மக்கள் தமது கர்மயோகியை எண்ணிக் கசிந்தனர்.

நிலையில்லாத அவரது யாக்கை அழிந்தாலும் அழியாத ஒருபோதும் மறையாத அன்னாருடைய புகழுடம்பு என்றென்றும் நிலைத்து நின்று அணையாத சோதியாய் அவர் சேவையை மக்களுக்கு விளக்கிக் கொண்டு ஒளி வீசும்!

*வாழ்க அத்தியார் நாமம்! ஓங்குக அவர் தொண்டின் பலன்!!!*

*ஏர் முனையால் உயிர்வாழ்தம் மக்களுக்கு*
*உயர்கல்வி அளிக்குமொரு நோக்கங்கொண்டு*
*நீர்வேலி இந்துக்கல்லூரி தன்னை*
*நிருமாணஞ் செய்துஊ ருணியுமாக்கி*
*பார்மீது பாமரரும் போற்றும் வண்ணம்*
*பயிற்றைந்து ஆண்டுநற் பணி புரிந்து*
*ஓர்கணி மைப்பொழுதிலெமைப் பிரிந்துசென்ற*
*ஒப்பிலா "அத்தியார்" நாமம் வாழ்க.*

## பிறந்த நாட்டைப் பொன்னாடாக்கிய புனிதன்

க. மாகலிங்கம் (அ. இ. கல்லூரி மாணவன், நீர்வை)

*"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்*
*நற்றவ வானினும் நனிசிறந்தனவே..."*

என்ற கூற்றையுணர்ந்து தம் வாழ்க்கையில் வாழ்ந்து காட்டிய உத்தமர் அத்தியார் அருணாசலமென்பதை நாம் எல்லோரும் உணர்கிறோம். அவர் தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த பெருந்தகை.

நீர்வேலி செய்த அருந்தவப் பயனால் இவ்விடத்தில் அவதரித்தார். தமிழையும் ஆங்கிலத்தையும் முறைப்படி கற்றுத்தெளிந்தார். கொழும்பிலுள்ள கொம்மேசல் கொம்பனி அவருக்கு உத்தியோம் கொடுத்து உயர்வித்தது. அவருக்கு இயற்கையாய் அமைந்த இன்முகமும், நற்பண்பும், உயர் அதிகாரிகளின் நன்மதிப்பையும் உயர் பதவியையும் தேடிக் கொடுத்தது. ஓய்வு நாட்களில் தன் கிராமத்திற்கு வரும்போது, தன் கிராமத்திலுள்ள குறைபாடுகளை உணர்ந்தார். கொழும்பு மாநகரின் சீரும் சிறப்பையும் கண்டு பழகியவருக்கு நீர்வேலியின் குறைபாடுகள் தெற்றெனப் புலப்பட்டன. இளைஞருக்குச் சிறந்த முறையிற் கல்வி போதிப்பதற்கு ஏற்ற ஒரு பாடசாலை இல்லையே என்ற குறை அவரை மிகவருத்திக்கொண்டேயிருந்தது. அக்காலத்தில் "ஸ்ரீ சங்கரபண்டிதர் வித்தியாசாலை" திண்ணைப் பள்ளிக்கூடம் போல் இயங்கிக் கொண்டிருந்தது. அதனை வாங்கிச் சீர்திருத்தத் திட்டமிட்டார். தன் கடும் உழைப்பால் தேடிக் கிடைத்த கைப்பொருள் யாவற்றையும், மெய்பொருளாகிய கல்வியைப் பரப்பும் பொருட்டு அர்ப்பணித்தார். அதன் பயனாக "அத்தியார் இந்துக் கல்லூரி" என்னும் அகல் விளக்குத் தோன்றிப் பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் உள்ளத்தில் ஒளி பரப்புகின்றது. பல கலை விற்பன்னர்களும், மருத்துவ, பொறியியல் நிபுணர்களும், பட்டதாரிகளும் தோற்றுவதற்கு வித்திட்டு வளர்த்து வருகின்றது. இச்செயற்கையைச் செய்துமுடிக்க அப்பெரியார் அடைந்த இன்னல்கள் அளப்பில. தன் வாழ்க்கை வசதிகளைத் துறந்தார். தம்மை எதிர்த்தவர்களைச் சமாளித்தார். தம் பொருட் செல்வத்தை இழந்தார். ஆனால் அதனை அவர் பொருட்படுத்தவில்லை. தம் மக்கள் நன்றாக வாழவேண்டும். அறிவு விருத்தியடைய வேண்டுமென்ற பெருநோக்கே தலைதூக்குகின்றது.

அவ்வழியில் இவர் சேவை பல. கிராமங்கட்கு அரசினர் வழங்கும் சலுகைகளை நம் கிராம மக்கள் அறியாது வாழ்ந்திருந்தனர்.

அவற்றை மக்கள் உணரும்படியாக உணர்த்தினார். கிராம இளைஞர்களின் முற்போக்கிற்கும், கிராமத்தின் உயர்விற்கும் ஏற்றவகையில் கிராம முன்னேற்றச் சங்கங்களை அமைத்துக்கொடுத்து பற்பல நூல் நிலையங்களையும் நிறுவினார். அது நம்மனோர்க்கு ஓய்வு நேரங்களைக் கழிக்கவும், அறிவை வளம்படுத்தவும் பெருமளவில் உதவுகின்றன. கிராமச் சங்கத்தில் அங்கத்தவராகும் பேறும், தலைவராகும் தன்மையும் இயல்பாகவே கிடைக்கப்பெற்றன. கிராமச் சங்கத்தின் தலைவராகச் சேவை செய்யும்போது கிராம முன்னேற்றத்திற்கு அயராது உழைத்தார்.

கிராம மக்களின் விளைபொருட்களை விற்பனை செய்து நயம்பெறக்கூடிய வகையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தை அமைத்து கமக்காரருக்கு நன்மை விளைவித்தார். "மக்கள் ஐக்கியம்தான் வாழ்வை உயர்த்தவல்லது" என உணர்ந்த பெருந்தகை பல சங்கங்கள் மூலம் சேவை செய்ய மக்கட்கு தூண்டு கோலாயிருந்தார்.

முதியோருக்கும் இளையோருக்கும் சேவை செய்த சீரியான், சிறுவர்கட்கும் பாலகர்கட்கும் ஒரு விடுதி அமைத்தல் வேண்டும் என்ற அவசியத்தை உணர்ந்தார். அவருடைய அரு முயற்சியே இன்று யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஓர் அற்புதம் போல் எங்கெணும் இல்லாத பாலர் விடுதியொன்றை தம் கிராமம் பெற்று விளங்குகின்றது. அதற்கு அரசினர் ஆதரவும் கிடைத்து வருகின்றது. இவ்வகையில் அப்பெரியார் பணி அளப்பில. அவர் உள்ளியவை யாவும் உயர்வுள்ளனவேயாகும்.

*"வெள்ளைத்தனைய மலர் நீட்டம் மாந்தர்தம்*
*உள்ளத்தனைய துயர்வு"*

எனக் குறள் கூறுகின்றது. அதுபோலவே அவர் உள்ளம் அவருக்கு உயர்வைத் தேடிக்கொடுத்தது. "அத்தியார்" என்ற பெயர் நாலாதிக்கும் எட்டியது. அவரைப் போற்றாதார் இல்லர். அரசினர் கூட சமாதான நீதவான் என்ற கௌரவப்பட்ட கொடுத்து பெருமை பாராட்டினர்.

அப்பெரியார் பூதவுடம்பு இவற்றை ஞான்று மறைத்துவிட்டது. அவர் செயற்கரிய செய்த செம்மல், தனக்கென வாழாத பெருந்தகை பிறந்த நாட்டைப் பொன்னாடாக்கிய புனிதன்.

*வாழ்க அவர் பெரும்பணி!*

# பொற்கதிர்கள் கொய்வதற்குப் புறப்படுவோம் வாரீர்

த. காங்கேயன் (அ.இ.கல்லூரி மாணவன், நீர்வை)

குறகிய தோற்றம், குமிழ் மிதிதடி ஏறிய கம்பீர நடை, ஆழ்ந்த சிந்தனையுடைய பார்வை, அதில் அருள் கனிந்தொழுகும் நற்பண்பு...

கற்பனையில் நம்முன் வந்து நிற்கும் அத்தியாருக்கும், கண்முன் நாம் கண்ட அத்தியாருக்கும் இந்த மட்டில் ஏதொ ஒற்றுமை இருக்கத்தான் செய்கின்றது. அவர் பெற்றார், இவர் வளர்த்தார்.

பாரதி தாசன் எந்நாளோ ஒரு கனவு கண்டான். அந்தக் கனவு சொற்களினால் உருவம் பெற்றது. கருத்தின் சிறப்பினால் உயிர் பெற்றது. கவிதை ஒன்று பிறந்தது.

*என்னரும் தமிழ் நாட்டின் கண்*
*எல்லோரும் கல்வி கற்றுப்*
*பன்னறுங் கலை ஞானத்தால்*
*பராக்கிரமத்தால் அன்பால்*
*உன்னத இமயமலை போல*
*ஓங்கிடும் கீர்த்தி யெய்தி*
*இன்புற்றார் என்று மற்றோர்*
*இயம்பக் கேட்டிடல் எந்நாளோ.*

இதே கனவு ஈழத்து நீர்வேலியைச் சார்ந்த அத்தியார் அருணசலம் அவர்களின் பரந்த இதயத்திலும் என்றோ ஒருநாள் தோன்றியது. இந்தக் குறுமுனியின் கற்பனையில் கவிதை பிறக்கவில்லை. பதிலாக ஒரு பெரிய கலைக்கூடமே உருவாகியது.

கால் கடுக்க நடந்து, பல மைல்கள் கடந்து கல்வி கற்கத் துடிக்கும் எம்மூர் மக்களுடைய தாகத்தை அவர் நன்றாகப் புரிந்துகொண்டார். பினனர் அவ்வூரிலேயே ஒரு கலாசாலை உருவாக வேண்டும் என்ற இலட்சிய வெறி அவர் உள்ளத்தில் பதிந்துவிட்டது. எண்ணக் கனவில் எழுந்த நற்கோவில், கற்கோவிலாக மலர்வதற்கு அரும்பாடுபட்டார். முயற்சியின் முழு வெறியாக அரும்பியது ஒரு கலைகழகம். அரும்பிய கலைக்கூடம் பாங்குற வளர்ந்து, சிறப்புற இயங்குவதற்கும் இடையூறாக "இல்லாமை" என்னும் இருள் சூழத் தவறவில்லை. எத்தனையோ தொல்லைகள், கஷ்டங்கள்...... எதையும் தாங்கும் இதயம் படைத்தவரல்லவா அப்பெருந்தகை..........!

*"எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால்*
*இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்..."*

என்று எம்மூர் மக்களைத் தட்டியெழுப்பி, அவர்களின் உதவியுடன், கலைக்கழகத்தைக் கண்போலப் பேணி வளர்த்தார். ஆரம்பத்தில் அரிச்சுவடி எடுத்தியம்பி, இன்று பல்கலைக்கழகத்திற்கே வழியனுப்பும் வகுப்புவரை கல்லூரி வளர்ந்துள்ளதென்றால் அஃது அன்னாருடைய தன்னலமற்ற சலியாத முயற்சியினாலன்றி வேறு எதனாலும் ஆகியிருந்திருக்கும் என்பதற்கில்லை.

கல்லூரியுடன் தம் சேவையை நிறுத்தி விடவில்லை ஊருக்குழைக்கும் உத்தமனாகவும் வாழ்ந்தார். நீர்வேலி மண்ணில் சில செல்வந்தர்கள் வாழ்ந்தபோதிலும் அம்மண்ணில் வாழ் மக்கள் பலரின் வயிற்றில் வரட்சியும் நிலவியது. அப்பொழுதெல்லாம், "யான் பெற்ற செல்வம் பெறுக இவ்வையகம்" எனற் கொள்கையுடையவராய் பாட்டாளி மக்கட்கெல்லாம் வாரி வழங்குதலே தன் நோக்காகக் கொண்டு வாழ்ந்தார்.

நீர்வேலி சிகரெட் புகையிலைத் தொழிலாளர் சங்கத்தை ஸ்தாபித்த பெருமையும் அன்னாரையே சாரும். அவரைத் தொழிலாளர்களின் தோழன் என்று கூறின் அது சாலவும் பொருந்தும்.

தமிழ் தந்த அகத்திய முனியை தமிழ் உள்ளவரைக்கும் மறப்பது என்பது எவ்வளவு தூரம் இல்லையோ அந்த அளவிற்கு நீர்வேலி ஊரிற்குக் கல்வி தந்த அத்தியார்அவர்களை அவ்வூரின் நன்மக்கள் மறப்பதும் இல்லையெனக் கொள்க. எழுத்தறிவித்த இறைவனாக அன்னார் அவர்கள் நீங்காத நினைவில் நிலையாக நிற்பார்.

*மண்ணிலே உயர் நீர்வேலியில்*
*பண்பிலே உயர் ஐயனே!*
*மட்டம் வெடித்துக் குட்டிவளரப்*
*பட்டதாய் வாழை போல்*
*எண்ணுடன் எழுத்தும் ஊட்டி*
*கண்ணிமை போல் நம்மைக் காத்திட*
*எட்டுத்திக்கெலாம் எம் புகழ் பரவிட*
*கடமைகள் முடிந்ததென்றே*
*விண்ணகம் ஏகினாய் வீரா!*
*விதியினை வென்றவர் இம்மேதினியில் உளரோ!*

*அத்திபூத்ததென ஆயிரத்திலொருவரென*
*சேய்வாழத் தான் மாயும் சிறந்த வாழையென*
*அத்தியார் வாழ்ந்திருந்து அறிவு விதை தூவிவிட்டார்.*
*பொற்கதிர்கள் கொய்வதற்குப் புறப்படுவோம் வாரீர்!*

# அத்தியார் அமைத்த கல்லூரி

**பொ. சுப்பிரமணியம் அவர்கள்**
**(ஆசிரியர், அத்தியர் இந்துக் கல்லூரி)**

நீர்வேலித் தரவையில் ஒரு மரம். அது பார்ப்புக்கட்கும் பறவைகட்கும் பயன்பட்டுக் கொண்டு இருக்கும் பழமரம். அதன் உடல் அமைப்பு மிக நிலையானது. ஆனால் அது கொம்பர்களை நீட்டிப் பரக்கவிடவில்லை. அதனால் நறுமண மலர்களும், பழங்களும் குறைவு. இருந்தாலும் பச்சொளி வீசும் இலைகள் நிரம்பி மிளிர்கின்றது. அதனால் எவரும் இதனை யார் பயிராக்கினார் என வினவும் கட்டம் ஏற்படுகின்றது.

இஃது பிறரால் உண்டுபண்ணப்படவில்லை. அன்றி அரசினராலும் நாட்டப்படவில்லை. முதலியார் அத்தியார் அவர்களால் வித்திடப்பட்டது. இது வீறாப்பாக முறைத்தெழுந்தது. பல்லாண்டுகள் நீர் வார்த்து, எருவிட்டு, களைகட்டி வளர்த்த உத்தமன் மறைந்தான். மறைந்தாலும் அவன் இலட்சியம் விளங்க இறைவன் எடுத்த கனிமரம் அஃது இவ்வாறு அரும்பாடுபட்டு வானுற வளர்த்த விருட்சத்திற்கு அத்தியார் இந்துக்கல்லூரி என அழைத்தால் சாலப் பொருந்தும்.

நிற்க தன் குஞ்சுகட்கு உணவூட்டுகின்றது பறவை. எவ்வாறு ஊட்டுகின்றது. தான் முதலில் உணவை மென்று பதமாக்கிச் சுவைத்து நன்றாயின் ஊட்டுகின்றது. அவ்வாறே பல கோணங்களிலுமுள்ள ஆசிரியப் பறவைகள் மாணவப் பார்ப்புக்களுக்கு கல்வியை ஊட்டுகின்றன.

இக்கலைக் கோயிலை முகாந்திரமவர்கள் எடுத்ததின் காரணமென்ன? அன்னசத்திரம் ஆயிரம் அமைப்பதிலும் ஆலயம் பதினாயிரம் எடுத்தலிலும் ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் அன்னயாவிலும் கோடி புண்ணியம் எனக் கண்டிருக்கவேண்டும். இதனைப் பாரதியின் அடியொற்றிச் சென்றாரோ? இல்லை. இல்லை. இயல்பிலே சமாதானத் தலைவர்க்கு அறச்சிந்தனை துளும்பிக் கிடந்தது. அன்றியும்.

*"செவிக் குணவில்லாத போழ்து சிறிது*
*வயிற்றுக்கும் ஈயப்படும்"*

என்ற வள்ளுவன் வாக்கை மெய்யாக்கத் தோன்றிய தலைவன். இவன் தன் கிராமத்திற்கும் அதற்கூடாக யாழ்ப்பாணத்திற்கும் அதற்கூடாக இலங்கைக்கும் அழியாத புகழைத் தேடிப் புகழ் வரம்பைக் கடந்த கருணைக் கடல்.

இத்தகைய சான்றோன் இட்ட ஆல வித்து ஓங்கி வளர்ந்து பெரும் பயனைத் தரவில்லையே? பெரியோர் இட்ட வித்து ஒன்று பத்தாகிப் பயன்படுமே? என்றெல்லாம் எண்ணலாம். பெரியோர்கள் நட்பு கரும்பை நுனியில் இருந்து அடிவரை சுவைத்தற் போன்றிருக்கும் என்பதை நினைவிருத்துக. இஃது வரவரத்தான் பயன் அளித்தாலும், இனி இவ்வூர் வாழ் மக்களே! அம்மரத்திற்கு நல் எருவிட்டு நீர் வார்த்து நச்சுக் களைகளைக் களைவதே உங்கள் கடன். அவ்வாறு முயன்றால்தான் நீவிர் நறுங்கனிகளைச் சுவைக்கலாம். முதலியார் நட்ட ஆலமரத்தை அழகுறச் செய்ய முயலாமை மிகக் கவலைக்குரியது. அவர் மரத்தை வளர்ப்பதே நீர் அவருக்குச் செய்யும் அருமைத் தொண்டு.

முதலியார் அவர்கள் கையில் சிறுபொருள் கிடைத்தது. அப்பொருள் பன்னூறாகப் பெருகி இன்று இக் கலைக்கழகத்தை நிலைநாட்டிற்று நயன் உடைய அத்தியார் அவர்களிடம் அகப்பட்ட செல்வம் பயனுள்ள பழ மரமாயிற்று. அஃது பறவைகட்கும் விலங்குகட்கும் மக்கட்கும் பயன்படும் என வள்ளுவன் வகுத்துக்காட்டிய வழியை நாட்டிற்று. நாமும் அவர்கள் அநுட்டானத்தைப் பின்பற்றுவது தான் அவர்களுக்குச் செய்யும் இறுதி மரியாதை. அஃதெவ்வாறெனில் அவர் கல்விக் கழகத்தைப் பல்கலைக் கழகமென்று பலரும் பரவ வளர்க்க வேண்டும்.

பிறநாட்டு மாணவர் வந்தாலும் வரவர இடம் கொடுக்கும் ஆய்வுகூடங்களும், மா மண்டபங்களும் நீர்த் தேக்கங்களும், மைதானமும் அமைந்த அழகிய தரவை இருந்தும் தயங்குவதன் கருத்தென்ன?

நிற்க "பூங்கன்றுதான் என்ன அழகாய் இருந்கிறதே! இதையேன் வெட்டுகிறான்?" என்ற பூங்கன்றைக் கத்தரிப்பவனைப் பார்த்து நாம் ஏசுகிறோம். எப்பொழுது ஏசுகிறோம்? அழகை அழகுறச் செய்யத் தெரியாத கட்டத்தில். அழகுபடுத்த அறிந்துவிட்டால் அவனை பூங்கன்றைக் கொய்யும் வனப்பை ஆவலோடு பார்ப்போம்.

அதேபோன்று முதலியாரும் பூங்கன்றை அழகுபடுத்தும் கலைஞன் ஏன்? பூ மலர்ந்து நறுமணத்தை அள்ளி வீசி, யாவர் உள்ளத்திலும் மகிழ்வை ஊட்டுகின்றது. அதே போன்று அத்தியாரின் கல்விப் பூங்காவும் அறியாமையைக் கெடுத்து அறிவைப் பெருக்கும் என்று கண்டே தன் குடும்பம் பூத்துப் பொலியவேண்டிய பொருளைக் கல்விக் கழகத்திற்கிறைத்தான். தன்னை வஞ்சித்த கலைஞன் எழுப்பிய கலைக் கோபுரத்தைக் கண்டு கைதொழாதிருந்தால்.....? அவ் அழகுணர்ச்சி எத்தகையது?

முதலியார் எடுத்த கலைக் கோட்டத்தில் பணிபுரியும் ஆசிரியத் தோழர்களே! பாலர்கள் உள்ளத்தில் அழுக்கு அதிகம் படிந்திருக்கு அதை இலேசாகத் துடைக்க வேண்டும். நோப்படுத்தாமல் கழுவ வேண்டும். மாணவர் மகிழ, ஆசிரியர் கண்டு சுவைத்து, கழுவ வேண்டும். கழுவியதும் நறும்புகையூட்டிப் பரிமளிக்கச் செய்யவேண்டும். அஃதொன்றே நீவிர் முதலியார் அவர்கட்குச் செய்யும் பெருந்தொண்டெனச் செவியறிவுறுத்துகிறேன்.

## சிந்தையும் சொல்லும், செயலும் ஒன்றியிருந்தவர்

**திரு. ஆ. தெட்சணமூர்த்தி அவர்கள்**
**(முன்னாள் யாழ் - மாவட்ட உதவி அதிபர்)**

*"சொல்லும் யார்க்கும் எளிய அரியவாம்*
*சொல்லிய வண்ணம் செயல்"*

ஆண்டு 1921, மாதம், மாசி இது நான் பகிரங்க வேலைப் பகுதியில் வேலையிலமர்ந்திருந்த காலம். எமது தொகுதி அகில இலங்கையிலும் செய்யவேண்டிய வேலைகளின் செலவு மதிப்புக்களை ஆராய்ந்து அங்கீகரிக்கும் பொறுப்பைத் தாங்கியிருந்தது இதற்குக் தலைவராய் இருந்தவர் திரு. சி. தில்லைநாதன் அவர்கள் அவரது பிறப்பிடம் நீர்வேலியாகும். மேற்குறிப்பிட்ட மாதத்தில் ஒரு நாள், ஒரு குறகிய தோற்றமுடைய காற்சட்டை மேற்சட்டையணிந்த ஒருவர், சிரசில் அழகான வெண்மையான தலைப்பாகையுடனும், பொட்டிட்ட நெற்றியுடனும், புன்சரிப்புத் தவழும் முகத்துடன் நமது காரியாலயத்திற்கு வந்திருந்தார். உருவத்தில் திரு. தில்லைநாதன்

அவர்களை ஏற்றிருந்த இவர் அவரைச் சந்திக்கவே அங்கு வந்திருந்தார். இத்தகைய உருவ ஒற்றுமையுடையவர். அவரது தம்பியாராகவே அலலது நெருங்கிய உறவினராகவோ இருக்க ணேடும் என நான் நினைத்தேன். விசாரிக்கையில் "தம்பியாரல்லர், உறவினர்" என்றார் என் நண்பர் இரங்கநாதன் அவர்கள். மேலும் "கடுகு சிறுத்தாலும் காரம் பெரிது" என்றார் கூறினார்.

ஆடிமாதம் 1958 ஆம் ஆண்டு இவரை மீண்டும் கண்டேன். இப்பெரியார் யாழ்ப்பாணக் கச்சேரிக்கு வந்திருந்தார். தன்னை அறிமுகப்படுத்தினார். பின்னர் அடிக்கடி அங்கு வருவார். அவருக்கு என்றும் ஓயாத வேலை. உதவி நாடி வருவார். எதற்கு? தமக்கல்ல "ஊருக்காகக் கேட்கின்றேன்" என்பார் சமாதான நீதவான், முதலியார், அத்தியார் அருணாசலம் அவர்கள். கிராம முன்னேற்றச் சங்கம் முதலிய எத்தனையோ எண்ணற்ற சங்கங்கட்குத் தலைவர் இவர். உயர்தரப் பாடசாலை ஸ்தாபகர். நீர்வேலிப் பகுதியில் எத்திக்கே சென்றாலும், இவர் ஞாபகச் சின்னங்களைக் காணலாம். வித்தியாசாலையோ, சங்கமோ, பாதையோ, பாலமோ, கட்டடமோ, குளமோ, தோட்டமோ கூட்டமோ எல்லாவற்றிற்கும் காரணகர்த்தா இவரே. அவரன்றி ஒரு அணுவும் அசையாது என்றால் மிகையாகாது.

21.09.1961 ஆக இருக்கும். பிற்பகல் இரண்டு மணியளவில் கந்தோருக்கு வந்தார் முதலியார். அந்நேரம் நான் முதலியார் கணபதிப்பிள்ளை அவர்களுடன் உரையாடிக்கொண்டிருந்தேன். அங்கு வந்த முதலியாரும் அமர்ந்தார். "வெள்ளம் போகறதற்கு மதகு கட்டியாயிற்று. வாய்க்கால் வரம்பும் கட்டியாயிற்று வெள்ளம் தடையின்றிப் பாய்வதற்கு ஒருவருடைய வளவில் சில பனைகளைத் தறித்து அந்நிலத்தைச் சிறிது பள்ளமாக்க வேண்டும்" என்றார். "அப்படிச் செய்வது தானே என்றோம். "வளவுக்காரர் இணங்குகின்றாரில்லையே. விலைக்குத்தானும் தர மறுக்கின்றாரே" என்றார். "முதலியாரால் ஆகாதது எதுவும் உண்டோ? என்றோம். "அப்படியே தான் அந்த வளவுக்காரரும் சொல்லுகின்றார். தனக்கு வேறு காணி அரசாங்கத்திடமிருந்து எடுத்துத் தரட்டுமாம். நான் நினைத்தால் அதைச் செய்யலாம் என்றல்லவா சொல்லுகின்றார். ஏதும் வழியிருக்கின்றதா? என்று கேட்டார். விபரத்தைச் சரிவர அறிந்தபின் "தற்கால நிலைமையில அப்படி அவருக்கு காணி கொடுக்க இயலாது. ஏதோ தாங்களே ஊரவர்களோ அவரிடம் கேட்டுக் காணியைப் பெற வேண்டியதுதான்" என்றோம். அவ்வாறு செய்வதற்கே உறுதி பூண்டார்.

நாங்கள் மூன்று பேரும் வயோதிபர். ஏதோ, சாவைக்குறித்துப் பேச்சு வளர்ந்தது. "காலஞ் சென்று இறப்பது நல்லது தானே. செய்கின்ற புண்ணியத்திற்கு ஈடாக ஏதோ நல்ல இடத்திற்கு பிறகு பிறக்கலாம்" என்றார். "ஆம், தங்களைப் போன்ற பரோபகாரச் சிந்தனை யுடையவர்கள், செயலாற்றுபவர்கள், பிறர்க்கு வழிகாட்டி யாயுள்ளவர்கள் அவ்வாறு நல்ல இடத்திற் பிறப்பதற்குத் தடையேது" என்றோம். விடை பெற்றுக்கொண்டு சென்றார்.

அந்தோ அந்நேரத்தில் இருக்கு அந்நியகாலம் வந்துவிட்ட தென்று நாங்கள் அறியவில்லை. அங்கிருந்து சென்றார். கூற்றவனும் கூடச் சென்றான். அவர் இறந்த செய்தி எங்களுக்கு இடியேறு போலிருந்தது.

*நெருநலுள னொருவனிற்லை யென்னும்*
*பெருமை யுடைத் திவ்வுலகு*

அவர் பிரிவையிட்டு பின்னால் நடக்கவிருக்கும் ஒன்றை முன்கூறும் தீர்க்கதரிசி என்றழுவோமா? அல்லது, தமது வாழ்வை பிறர்க்கே அர்ப்பணஞ் செய்த பெருமகனென்றழுவோமா? அன்றி உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசாத உத்தமன் என்றழுவோமா? இல்லை. இல்லை. சிந்தையும் செயலும் ஒன்று பட்ட தியாகி என்றே அழுவோம்.

மெய்வருத்தம் பாராது, கண் துஞ்சாது, எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளாது, செவ்வி அருமையும் பாராது, அவமதிப்புங் கொள்ளாது கருமமே கண்ணாக வாழ்ந்தார் அன்பர் அத்தியார் அருணாசலம். அவருடைய வாழ்க்கை எம்மனோர்க்கு எடுத்துக்காட்டாக விளங்குவதாக!

*உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்*
*உள்ளத்து ளெல்லாம் உளன்.*

**நீர்வேலி முதலியார் அ.அத்தியார் அருணாசலம் J.P. அவர்கள்**

## ஆயிரத்தில் ஒருவர்

**திரு. ச. தர்மலிங்கம் அவர்கள்**
**(காமாட்சியம்பாள் கைத்தொழிற் சங்க ஸ்தாபகர். நீர்வேலி)**

*"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்*
*தோன்றலிற் றோன்றாமை நன்று"*

*"சிறப்பீனும் செல்வமுமீனும் அறத்தினூ உங்கு*
*ஆக்கம் எவனோ உயிர்க்கு"*

*"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே*
*செல்லும் வாயெல்லாம் செயல்"*

*"அன்றறி வாமென்னா தறஞ்செய்க மற்றது*
*பொன்றுங்காற் பொன்றாத் துணை"*

*-வள்ளுவர்-*

இந்த நில உலகில் காண்பன எல்லாம் ஒருநாள் அழிந்து போகக்கூடியன. ஆனால் ஒன்றே ஒன்றுதான் அங்ஙனம் அழிவுறாது. ஏனறும் நிலையாக நிற்கத்தக்கது. அது எது என ஆராயுங்கால், அது மூன்று எழுத்துக்களால் ஆய "அறம்" என்பதாம்.

ஒருவன் உயிரோடு உலகில் வாழுங்காலை, உள்ள ஆண்டு அத்தனையும் ஓடி ஒழந்து போனாலும், ஊழிதான் பேரூழியென உருண்டுருண்டு சென்றாலும், உகாந்தகாலமெலாம் கூடி உதித்தெழுந்து வந்தாலும், ஒன்றினாலும் அழியாதிருக்க வல்லது "அறம்" என்றும் ஒப்பற்ற பொருளே "அறமெனப்படுவதே உயிர்க் கிதம் புரிதல்" என்ற ஆன்றோர் மொழிக்கு அமைய.

*" அறவாழியந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லால்*
*பிறவாழி நீந்தலரிது"*

என்பது வள்ளுவர் வாக்கு. இறைவனும் அறவாழியத்தணனாக அன்றோ இருக்கின்றான். உமை அம்மையார்கூட "அறம் வளர்த்த செல்வி" என்னும் பெயரினைப் பெற்றாளென்றால் அவ்வறத்தின் பெருமையை ஆர்தான் உரைக்கவல்லார். அறமும் அன்பினையே அடிப்படையாக் கொண்டு எழுகின்றது. அதனாற்றான் ஒல்காப் பெரும் புகழ்பூத்த தொல்காப்பியரும்.

*"இன்பமும் பொருளும் அறனுமென்றாங்கு*
*அன்பொடு புணர்ந்த ஐந்திணை"*

*என்ற விளக்கியதோடு தெய்வத் திருவள்ளுவனாரும்*

*"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப்*
*பண்பு பயனும் அது"*

*"அறனென்பட்டதே இல்வாழ்க்கை அஃது*
*பிறன்பழிப்பதில்லாயின் நன்று"*

*"அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றிற்*
*புறத்தாற்றிற் போ ஓய்ப் பெறுவதெவன்"*

என்பனவாக விளக்கியதிலிருந்து அவ்வறமே ஒருவன் இறக்குங்காலை அவனைத் துறக்கம் புகுவிப்பதற்கு உறுதுணையாயும் இருப்பதெனப் போதருகின்றது. இதனால் இல்வாழ்வானுக்கே அறத்தினை ஓம்பும் வாய்ப்பு அமைந்துள்ளதையும் நாம் அறிகின்றோம்.

அறம் என்பது அன்பு உருகச் செய்தல் வேண்டும். வெளிவேஷமாகிய பட்டம் பதவியை விரும்பி உலகத்தார் தம்மை மீக் கூறுதலை மாத்திரம் விழைந்து ஆற்றும் செயல் ஒருபோதும் அறமாக மாட்டாது. அதனால் எவ்வித நன்மையும் உண்டாகமாட்டாது. "கடைத் தேங்காயைத் திருடி வழிப் பிள்ளையாருக்கு உடைப்பது" போன்ற ஏழை மக்கள் வியர்வை சிந்த வருந்தி உழைத்ததை அவர்கள் கண்ணீர் வாரப்பிடுங்கிப் பிறர் மெச்சக் கொடுப்பதால் யாதும் பயன் கிட்டமாட்டாது. இதனை விளக்கியே.

*"ஆம் பொருள் நாமதேயானால் அறம்பிறர்க் காவதுண்டோ!"*

எனப்பெரியார் வாக்கு முரசறைகின்றது. ஆதலால் சகல சீவர்களிடத்திலும் நெகிழ்ந்த அன்புடையவர்கள் மாத்திரமே எவர்க்கும் தீங்கு நேராத முறையில் பெயர் புகழ் முதலியவற்றை விரும்பாது அறம் செய்வார். இத்தகையோர் ஆயிரத்தில் ஒருவராக அன்றே இருப்பார்.

இவ்வாறு செய்யப்படும் அறம் முற்காலத்தில் முப்பத்திரண்டு வகையாக இருந்ததென்பதை திவாகர நிகண்டில்,

*“ஆதுலர்க்குச் சாலை ஓதுவார்க்கு உணவு,*
*அறு சமயத்தோர்க்கு உண்டி, ஆவுக்கு வாயுறை*
*சிறைச்சோறு, ஐயம், தின்பண்டம், மகச்சோறு*
*அறவைப் பிணஞ்சுடல், அறவைத் தூரியம்*
*வண்ணார், நாவிதர், வதுவையாற்றல், நோய்மருந்து*
*கண்ணாடி, காதோலை, கண் மருந்து, தலக்கெண்ணாய்,*
*பெண்போகம், சுண்ணம் பிறர் துயர் காத்தல்,*
*தண்ணீர்ப் பந்தல், மடம், தடம், கா,*
*ஆவுரிஞ்சு, நடுதறி, ஏறுவிடுத்தல், விலை கொடுத்துக்*
*கொலை உயிர் மீட்டல், விங்குணா*
*இச்செயல் முப்பத் திரண்டற மென்ப”*

எனக் கூறுவதாலறிக.

இத்தகைய அறம் வளர்க்கும் செழும் செல்வச் சீமான்களது குணமாண்புகளை,

*“உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்*
*உள்ளத்துள் எல்லாமுளன்”*

*“வெள்ளத் தனைய மலர் நீட்டம் மாந்தர்தம்*
*உள்ளத் தனைய துயர்வு”*

*“சுற்றத்தாற் சுற்றம்பட ஒழுகல் செல்வந்தான்*
*பெற்றதாற் பெற்ற பயன்”*

என்று வள்ளுவரே கூறியுள்ளார்.

இவ்வாறாக இயற்கை அன்னையின் திருவிளையாடலானது ஒரு நாட்டின் அறம் என்பது குன்றி மறம் தலைதூக்கி ஆடத் தொடங்குங் காலங்களிளெல்லாம் அந்த நாட்டுக்கு நன்மை பயப்பக்கூடிய செயலாற்றும் உத்தம புருஷர் ஒருவரை உதவி அவர் வாயிலாக அந் நாட்டைப் பல்லாற்றானும் முன்னேற்ற பாதையில் இட்டுச்செலுத்த வல்ல யாப்பினை அளிக்கின்றது.

அந்த வகையில்தான் முன்னொருகால் பூமியின் வடபாகம் தாழ்ந்தது. அதனைச் சமப்படுத்தவேண்டிய சிவபிரான் அகத்திய முனிவரைத் தென்பூமிக்கு அனுப்பினார். அதுபோல, தமிழகத்துத்

தென்பாலுள்ள ஈழத்து யாழ்ப்பாணத்திலே, பல வளங்களும் நிறைந்த நீர்வையம்பதிலுள்ளார் செய்த தவப்போறாகவும், பிரபல சைவ வேளாளர் குடியிலே ஸ்ரீமான் அருணாசலம்பிள்ளை அவர் மனையாள் நாச்சிப்பிள்ளை என்பவர்களது பிள்ளைக் கலி தீர்க்கவும், சைவமும் தமிழும் சரி தழைத் தோங்கவும், மக்களனைவரும் மாண்பொடு வாழவும், செல்வமனைத்தும் சீரொடு பொலியவும், செய்யவல்ல சற்புத்திரராக அத்தியார் என்னும் பெயருடன் உதித்தார். உரிய காலத்தில் பூதத்தம்பியவர்களின் புத்திரி தங்கத்தையொத்த தங்கத்தைத் திருமணம் புரிந்து இல்லற வாழ்வை நல்லறமாக்கிப் பெற்றுக்கொண்ட தவத்தின் சீரால் பாலசுப்பிரமணியம் என்னும் அருமை மகனையீன்று பிள்ளைக் கலியைத் தீர்த்து விளங்கினார்.

அவரது உயர்குடிப் பெருமைக்கும், பண்தொட்டுப் பற்பல நாவலர் உற்பவித்திட்ட ஊர்ப்பெருமைக்கும், தியாக சிந்தைக்கும், சிவநேய முதிர்ச்சிக்கும் ஏற்ப இளமை தொட்டே எழிலொடு வளர்ந்தார். வளம்பல படைத்தார். உரிய பருவத்தில் நெடுங்கணக்காய்ந்து தமிழ், ஆங்கிலம் ஆகிய கலைகளை அமோகமாக அள்ளிப் பருகினார். அரசினரவையில் முதலியாரானார். அது மட்டுமா? சமாதான மன்ற நீதவானானார். கிராமச் சங்கத் தலைவராயினார்.

நாட்டு மக்களின் நாட்டமனைத்தும் இவர்பாற் சென்றது. தமிழ்க்கலை வளர்த்த அகத்தியர் போன்று தன் கிராமத்தில் தமது செலவில் "அத்தியார் இந்துக் கல்லூரி" என்ற நாமங்கொண்ட கழத்தினை நிறுவினார். அங்கே தமிழ், ஆங்கிலமாகிய இரு மொழிகளையும் வளர்த்தார். பாலர்கள் பருகும் பால் நிலையத்தையும் பாலகர்கள் பகல் விடுதிச்சாலையையும் நிறுவுவதற்குப் பெரும்பணி புரிந்த பெரியார்களில் தாமும் ஒருவரானார்.

கிராமங்களின் முன்னேற்றங்கருதிக் கிராம முன்னேற்றச் சங்கத்தை நிறுவினார். விவசாயிகளின் குறைகளைத் தீர்க்க எண்ணி பல நோக்கக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றைத் தமது சொந்தப் பணத்தையே இயக்குதற்குரிய எழுத்தாளர் பணியாளரது கடமைகளையும் யாதொரு வேதனமும் பெறாது தாமாகவே புரிந்து வந்தார். வெள்ளைப் புகையிலைச் சங்கம் ஒன்றை ஸ்தாபித்துப் பெரும்பணி புரிந்தார். இவைகளிலெல்லாம் தாமே தலைவராகவுமிருந்து நலம்பல புரிந்தார். இது மாத்திரமா? தம் நாட்டு மக்களின் விளை நிலங்களை உப்புநீர் பாதிக்காவண்ணம் தடுக்க எண்ணி ஓர் அணைகட்டுவித்தார். நாட்டு மிருகங்களின் நலம் கருதிப் புல்தரைகளின் சமீபங்களில் ஆங்காங்கு

நந்நீர் அமைந்த மடு, குளம் அமைத்தார். ஆவுரோஞ்சு நடுதறியும் ஆங்காங்கு நாட்டினார். மிகக்கஷ்டப்பட்டுப் பொதுமக்கள் பாவித்த கரடுமுரடான பாதைகளை யெல்லாம் சமன்செய்து தார் போட்ட பாதைகளாக்கினார். ஆலயத் திருப்பணிக்கும், அடியார் குரு பூசைகளுக்கும் ஆவன உதவி அருந்தொண்டாற்றினார். முன்னிருந்த பெரியார்களை வருங்கால மக்களும் நினைவில் வைத்திருத்தல் நலமென எண்ணி "சங்கரபண்டிதர் நூல் நிலையம்" ஒன்றை ஸ்தாபித்தார்.

மக்கள் பணியெல்லாம் தம் உயிரென மதித்து மதிபல புகட்டி மாவுரை வழங்கினார். இத்தகைத் தியாகபுருஷராம் உத்தமப் பெரியாரது சேவைகள் அளப்பில. இவரே திவாகரமுனிவர் கூறிய முப்பத்திரண்டு அறமும் தப்பாதோம்பி அறம்வளர்த்த செழுஞ் செல்வராய்த் திகழ்ந்தார். இவர் ஈட்டிய அறத்தின் சோதி சந்திர சூரியர் உள்ளனவும் நிலைக்குமென்பதில் இழுக்கில்லை. ஆகவே இவர் ஆயிரத்தில் ஒருவர் என்று கூறுதல் மிகையாகாது.

வெண்பா

*சித்தியாதன வெல்லாம் சித்திக்கச் செய்திறமை*
*அத்தியார் போல ஆர்புரிவார்? - தித்தியார்*
*ஆயிரவர் கூடுகினுமான பலனங்குண்டோ*
*மாயிருஞாலத்தே மதி!*

*வித்தியானதான மொன்றே மேலான தென்றெண்ணி*
*அத்தியா ரின்றோ ரகத்தியராய் - நித்தமும்*
*தேசம் மொழி சமயச்சீரின் திறமறிந்து*
*பாசமுடன் செய்தார் பணி!*

முதலியார் அருணாசலம் அத்தியார் அவர்களது ஆன்மா நலம்

*தமிழ்சைவம் ஆதியன தழைத்தது ஓங்கித்*
*தர்மூரின் மக்களெல்லாம் மேன்மை கொள்ள*
*குமிழ்மிதி யடியணிந்து குமரன்போலக்*
*குறுநீறும் பொட்டுமிட்டுக் கோயில்சென்று*
*அமிழ்தினிலு மினிதாய பாக்கள்யாவும்*
*ஆதியோடந்தமாய்ப் பாடிவேண்டி*
*சிமிழன்ன பொழுதிரண்டும் சேவைக்கீந்தாய்*
*சென்றாயோ சென்றாயோ சிவத்தை நோக்கி.*

*அமலனடியில் அமரத்துவமுற அனுதினமும் வாழ்த்துவோமாக.*

## கடன்பட்ட நிலையிலும் கடமை மறவதாவர்

**ஆசிரியர் திரு. சு. நாகலிங்கம் அவர்கள்**

**(வல்லை நூற்றல் நெய்தல் ஆலைவரையறை ஸ்தாபனப் பிரதிநிதி)**

இறந்தார் – மறைந்தார் என்ற இரண்டும் ஒரு பொருளைக் கொடுக்கினும், சந்தர்ப்பம் கருதி எடுத்தாளும் போதும், அவை தனித்து நின்று கருத்துப் பகர்கின்றன. ஒருவர் இறந்தார் என்றால் அவர் உயிர் உடலை விட்டு போய்விட்டது என்பது பொருள். உடல் அழிந்தது என்பது முடிவு. ஒருவர் மறைந்தார் என்னும் போது உடல் அழிந்தும் புகழ் மாறாதவர் மறையாதவர் என்பது கருத்து. மறைந்தவர் மக்கள் உள்ளதில் உழைத்தவர், நிறைந்தவர். இத்தகைய புகழ் மணக்கும் நிலையெய்தி வாழ்வது எல்லாராலும் முடியாது. அத்தகைய பாக்கியம் எல்லோருக்கும் கிடைப்பதில்ல. சிலருக்கு மட்டுமே கிடைக்கக் கூடிய அந்த பெருநிதியைப் பெற்று மறைந்தவர்கள் பலர். அவர்களுள் முதலியார் அத்தியார் அருணாசலம் ஜே.பி அவர்களும் ஒருவர்.

கற்றவர்களை உருவாக்குவதே சிறந்த பணி. சீரிய தொண்டாகிய கல்விகூடம் நிறுவியதன் மூலம் அத்தகைய சிறப்புபணியைச் செய்த பெரியார் இவர்.

பள்ளிப்படிப்பில் ஏழு வருடங்களை மட்டும் முடித்த அருணாசலம் அவர்கள், தொழில் வாயிலில் நுழையலானார். பதுளையில் ஆங்கிலேயரால் ஆரம்பிக்கப்பட்ட, கொம்மேர்சல் கம்பனியில் மதிப்பிற்குரிய உத்தியோகம் வகுத்த தமிழர் என்ற பெருமைக்குரிய அவர், கடனில்லாத நிலையில்தான், அக்கம்பெனியில் அடிவைத்தார்.

உத்தியோகம் பார்த்தாலும், அவர் உழைப்பு அத்துடன் நிற்கவில்லை. ஓய்வு நேரங்களில், கம்மேர்ஷல் கொம்பனிக்குச் சொந்தமான நிலத்தில், பயிர் செய்து பயன்கண்டு வந்தார்.

1925 இல் கொழும்பு திரும்புமட்டும் "கடன் என்றால் என்ன?" என்று அறியாது வாழ்ந்தார். ஆனால் தமிழ் மீதும் இந்து மதத்தின் மீதும் கொண்ட காதல் அவரைக் கடன்படவேண்டிய நிலைக்குத் தள்ளியது.

அன்றைய நாட்களில் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் வைத்து தமிழ் வளர்ப்பதும் சிறப்புக்குரிய பணியாகும். அத்தகைய சிறப்புக் குரியவர்களில் ஒருவரான சிவசங்கர பண்டிதருடைய திண்ணைப் பள்ளிக்கூடத்தை நடத்த முடியாத கையறு நிலையில் அவர் தத்தளித்தபோது கைகொடுத்து உதவியவர் இப்பெரியார் ஆவர். அல்லாமலும், கத்தோலிக்கர் நுழைந்து களங்கமேற்படுத்த முயன்றபோதும் தடுத்து நிறுத்திய பெருமைக்குரியவர் முதலியார் அவர்களே ஆவர்.

பின்னர், தாம் வதியும் நிலத்துக்கு அணித்தாயுள்ள காணிகளை விைக்கு வேண்டி ரூபா 80000 செலவில் பெரிய மண்டபம் நிறுவினார். இதற்கு வேண்டிய பணம் அவரிடம் இருக்கவில்லை.

இன்றைய நாளில் பொதுநிதிக்குப் பணம் திரட்டி, சொந்த நலனுக்காகச் செலவு செய்து ஏப்பம் விடும் பேர்வழிகள் மலிந்திருக்கின்றன. ஆனால், முதலியார் அவர்கள் அத்தகையோருக்கு மாறானவர்.

பிறரிடம் அவர்யாசிக்கவில்லை. நிதி திரட்டவில்லை. தனக்கே சொந்தமான முதுசொம், சீதனம், கொள்விலைக்கு வாங்கியவை ஆகியவற்றை விற்றும், ஈடுவைத்தும் பொருள் கொண்டு அத்தியார் இந்துக் கல்லூரியை நிறுவினார்.

அரசாங்கம் உதவும் என்ற நிலையை நம்பினார். ஆனால் அரசாங்கம் உதவவில்லை. என்றாலும் அவர் கடன்பட்ட நிலையிலும், கடமையை வழுவாது செய்தார்.

இத்தகைய பெரியாரின் வாழ்க்கையோ மிகமிக எளிது. குடிசை வாழ்வு வாழ்ந்தாலும், கோபுரம் போன்ற உயர்ந்த குணக்குன்று அவர்.

முருக பக்திமிக்க இவர், கோயில் பூசைகள் தடைப்பட்ட நேரத்திலும், உதவி பூஜித்து வந்தார். நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் கந்தபுராணம் படிப்பதிலே ஒரு தனி அலாதி

இவ்வரிய பணிகளை மேற்கொண்டதினால் பல பட்டங்கள் இவருக்க வழங்கப்பட்டன. 1949 இல் முகாந்திரம் என்ற பட்டமும் 1951 இல் முதலியார் என்ற பட்டமும், 1953 ஆம் ஆண்டு இரண்டாம் எலிசபெத் மகா இராணியால் வெள்ளிப் பதக்கமும் இவருடைய பொது

சேவைக்காக வழங்கப்பட்டது. 1960 இல் சமாதான நீதவான் பட்டம் வழங்கப்பட்டது.

இவர் கொழும்பிலிருந்து கொம்மேர்ஷல் கம்பெனியை விட்டு வரும்போது, அவருடைய காணி மேற்படி கம்பெனிக்கு ஈடாக இருந்தது, இவர் அக்கொம்பனிக்குச் செய்த சேவையின் பயனாய் 38 வருட உறுதியைக் கொடுத்து , கடன் தரவேண்டாமென்றும், தொடர்ந்தும் கடன்படல் வேண்டாம் என்றும் கூறியதோடு மாதம் ரூபா 250 உபகார நிதியும் (பென்ஷன்) வழங்கினர். அவர் தனக்கு கிடைத்தவை அத்தனையையும் பொது சேவைக்கு அர்ப்பணித்தார். முடிவில், தன் சொந்த தேவைகளுக்கே பணம் இல்லாது கஷ்டப்பட்டார். இந்த வேளையில் கம்பெனி தாராளமாய் ரூபா 2500 செலவுக்குக் கொடுத்தது.

தன் இரத்தத்தை வியர்வையாக்கி உழைத்துத் தன் சொந்தப்பணத்தில் கல்லூரியை நிறுவியும், முடிவில் அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டி நேரிட்டது. அவர் முயற்சியால், தியாகத்தால், எழுப்பப்பட்ட அக்கல்லூரியின் பலனாய், பயனடைந்தோர் பலர் பயனடையவிருப்போர் எண்ணில.

இத்தகைய நிலையிலும், அவர் தான் செய்த சேவையில் திருப்தி காணவில்லை. அவர் மனைவி தங்கம்மா ஓர் பெண்கள் கல்லூரியையும் நிறுவ திட்டமிட்டிருந்தார். அந்தோ! அவர் சேவையில் திருப்தி கண்டுபோலும், பரம்பொருள் அவரைத் தன்னுடன் அழைத்துக் கொண்டார்.

மக்களுக்காக வாழ்வாங்கு வாழ்ந்த இப்பெரியார், மக்கள் உள்ளத்தில் என்றுமுளர். இப்பெரியாரின் மறைவு கண்டு வாடாதாரிலர். வருந்தாதவர் இல்லை. அவரின் சீரிய தொண்டு இன்னும் கூறலாம். ஆனால் இக்கட்டுரை பரக்குமென அஞ்சி விடுத்தோம். எங்களை விட்டுத் தணந்த இப்பெரியார்க்கு மக்கள் என்றும் மதிப்புத் தருவர் என்பதில் ஐயமில்லை. எனவே 'தோற்றம் உண்டேல், மரணம் உண்டு' என்ற சுந்தரர் வாக்கொப்ப மனம் சாந்தி பெறுவோமாக.

# நீர்வை அன்னை ஈன்ற நிகரில்லாத் தலைவன்

## திரு. க. கணபதிப்பிள்ளை அவர்கள்

**(லிகிதர் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை)**

*உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்*
*உள்ளத்திலெல்லா முளன்.*

எமது கிராமத்தில் தன்னிகரில்லாத் தலைவனாக விளங்கியவர் சமாதான நீதவான் முதலியார் அத்தியார் அருணாசலம் அவர்களே ஆவர். எனக்கும் முதலியாருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அன்னார் அமைத்த கல்லூரியில் மாணவனாகக் கல்வி பயின்றேன். அவர் தலைமையின் கீழ் சில சமூகப் பணிகளிலும் ஈடுபட்டுழைத்தேன். அவரது குணவிசேடங்களையும் அருஞ்செயல்களையும் அளவெடுத்துக் கூறவியலாது. சில அம்சங்களை மாத்திரம் குறிப்பிடுகின்றேன்.

21.09.1961 வியாழக்கிழம பின்னேரம் இப்பெரியார் விவசாயச் சங்கவிடயமாக யாழ்ப்பாணம் சென்று தன் கருமங்களை முடித்துத் திரும்பும் வழியில் திடீரென அவர் உடல் தளர்ச்சி அடைந்தது. நண்பர்கள் அவரை அவசரமாக இல்லத்துக்கு அனுப்பினார்கள். அவர் அருமை மகன் பாலசுப்பிரமணியம், சிறந்த வைத்தியர் மூலம் சிகிச்சை அளித்தார். அத்தியார் அவர்கள் அவஸ்தை நிலையில் இருக்கிறார் என்ற செய்தி காட்டுத்தீ போல் கிராமம் முழுவதும் பரவியது. மாணவர், ஆசிரியர், பெற்றோர்கள் ஓடோடி வந்து அன்னார் உடல் நிலையைக் கண்டு ஏங்கினர். மறுநாள் அண்ணல் அத்தியார் அமரன் திருவடிநீழல் அடைந்தார். இவர் உடல் இறுதி மரியாதைக்காக அவர் அமைத்த கல்லூரி மண்டபத்தில் வைக்கப்பட்டது. மாணவர்கள் ஆசிரியர்கள் அணிவகுப்புடன் அவர் சடலத்தை மயானத்திற்கு எடுத்து சென்றனர்.

**இளமைப்பருவமும் கலாசாலை அமைத்தலும்**

இச்செம்மல் இளமையில் சிவசங்கர பண்டிதர் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் தமிழிலும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிகளில் ஆங்கிலத்திலும் தேர்ச்சி பெற்றார். தேவாரம் பாடுவதிலும் புராணம் படிப்பதிலும் வல்லுநராக விளங்கினார். "விளையும் பயிரை முளையிலே தெரியும்" இதற்கு ஒப்பாக இவர் இளமையில் ஓர் தீர புருஷனாக விளங்கினார். கொழும்பு கொம்மேர்சல் கொம்பனியில்

உத்தியோகம் பார்த்து சிறந்த புகழ் பெற்றார். அன்ன யாவிலும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல், என்ற பாரதியின் கூற்றுக்கு இலக்கியமாக அண்ணல் அவர்கள் ஓர் அழகான கல்லூரி ஒன்றினைக் கட்டி, அத்தியார் இந்துக்கல்லூரி என்ற நாமத்தையும் சூட்டி மாணவரது கல்வியை வளர்த்தார்.

**வாழையடி வாழை**

இப்பெரியாரது குடும்பம் சைவப்பற்று நிறைந்த குடும்பம். நீர்வைக் கிராமத்தின் முப்பெருங் கோவில்களிலும் இவர் சந்ததியார் விழாக்கள் எடுத்தும் பூசைகள் செய்தும் வருகின்றனர்.

**நேர்மையும் நன்றிமறவாத பண்பாடும்**

இவரிடத்து அமைந்த சிறந்த குணம் நேர்மையாகும். கொழும்பு கொம்மேர்சல் கொம்பனியார், ஓய்வுக்கால உபகாரச் சம்பளம் அளித்தது இவரின் நேர்மைத் திறனையும் கடமைப் பண்பையும் எடுத்துக்காட்டுகிது. இவருடைய ஆத்ம நண்பன் 'ஸ்ரீவன்சன்' என்பவரை அவர் இறக்கும்வரை மறக்கவில்லை. துரையவர்கள் அவருக்குச் செய்த உதவிகளை எவர்க்கும் எப்போதும் எடுத்துக்கூறுவார்.

**நிர்வாக வன்மையும் விடாமுயற்சியும்**

முதலியார் அவர்களிடம் இரண்டு குணங்களும் குறைவின்றி நிறைவுடன் விளங்கின. தன் உடலையும், பாராது ஓய்வின்றிக் கடமை புரிவார். கணக்கு முறை வைத்தலில் மிகவும் சிறந்தவர். 'சோர்வு', 'இளைப்பு' என்ற பதங்களை அவர் என்றும் அறியார்.

**வள்ளற்றன்மையும் சமூக சேவையும்**

தனது உழைப்பு முழுவதையும் தன் கல்லூரிக்குச் செலவழித்தார். அன்றியும் தன் பிற்கால வாழ்க்கையில் பொது ஸ்தாபனங்களுக்கும் வீதிகள் அமைத்தற்கும் ஏழைகளுக்கும் பொருள் அளித்தார். அண்ணல் அத்தியாரின் ஆபரணம் "சமூக சேவை" ஆகும். சிலவேளைகளில் பிறரிடம் கடன்பெற்றுச் சமூகப் பணிக்குச் செலவு செய்யும் பழக்கம் இவரிடம் மிக உண்டு.

**சிரித்த முகமும் உரத்த பேச்சும்**

எந்நேரமும் சந்தோசமாகவே இருப்பார். ஆனால் சுயநலவாதிகளையும் அழுக்காறு பூண்ட அயோக்கியர்களையும்

நீதியிற் தவறும் அரசாங்க உத்தியோகத்தர்களையும் வன்மையாகக் கண்டிக்கும் பழக்கம் இவரிடம் உண்டு. உரத்துப் பேசும்போது எவரும் அஞ்சுவார். தான் அமைத்த கல்லூரியைப் பெரியோர்கள் அறிஞர்கள் தரிசிக்கும் போது அகமகிழ்வார்.

**அறிவும் அநுபவமும்**

கந்தபுராணத்தில் தத்துவக் கருத்துக்களை எடுத்து விளக்குவார். ஒவ்வொரு மனிதனும் கடவுளில் நம்பிக்கை வைக்க வேண்டும். நேர்மையுள்ளவனாக வாழவேண்டும். இந்த இரண்டு குறிக்கோளுடன் வாழ்வதுதான் உண்மையான மனித வாழ்க்கை எனத் தன் அனுபவரீதியில் எடுத்துக் கூறினார்.

**அரசாங்கம் மதிப்பும் பாராட்டுரைகளும்**

முதலியார் சமாதான நீதவான் பட்டங்கள் இவருக்கு வழங்கப்பட்டன. காலஞ்சென்ற பிரதமர் D.S. செனநாயக்கா அவர்கள், இவரது கல்லூரியில் நிகழ்ந்த ஓர் மாபெரும் கூட்டத்தில், "சேர் பொன். இராமநாதன் போன்ற தலைவர்களில் முதலியார் அத்தியார் அவர்களும் ஒருவர். இம்மாபெரும் கல்லூரியைத் தன் சொந்தப்பணத்தில் நிறுவிய தருமச் செயலுக்காக இலங்கை அரசாங்கம், முதலியார் அவர்களுக்கும் அவர் குடும்பத்தாருக்கும் என்றும் கடமைப்பட்டுள்ளது" என்று கூறினார்.

அண்ணல் அத்தியார் அவர்கள் சாதிசமய பேதம் பாராட்டாத ஓர் பாரதி. அஞ்சா நெஞ்சம் பூண்டவர். முன் வைத்த காலைப் பின்வைக்க மாட்டார். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன். இத்தகைய உயர்ந்த பண்புகள் வாய்ந்த இப்பெரியாரது ஆத்மா சாந்தி அடைவதாக. அவர் இன்குரல் எதிர்காலத்தவருக்கு வழிகாட்டியாக இருக்கட்டும்.

*நம் பெருங்குரவருக்கு வணக்கம்*

*சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

# A Philanthrophist

***by. S. Sivasubramaniam. Esqr,***
***proctor, s. c. colombo***

He was a great saivite; he was a loyal and public spirited tamil; he was a philonthrophist; he was a good man. he tried to serve our people, our country, our culture and riligion with great earnestness regardless of financial losses to himself. if he had cared to increase his wealth for his own benefit or that of his family, he would have been a very rich man. if he had cared to live a comfortable life for himself, he could have done so easily. instead of seeking financial benefit for himself or for his family or his physical comfort he underwent great hardship for a long number of years to render service according to the best of his lights. he was a rare type of person ; such persons aer not often found in our community. he was great public benefactor; he was a person of simple and affable ways. there is a saying that a prophet is not honoured at times by his own pepole or in his own counrty or place of residence. perhaps the public may not have fully residence. perhaps the public may not have fully realised the worth of sriman attiaar arunachalam during his life time. it is our duty to think of him who has done so much public work with affection and gratitude. by so remembering him, we, will, do good to our mental and moral development and to the general progress of our people. by remembering good people, we do good to ourselves and to our country.

Mr. Arunachalam belonged to a respected and leading hindu family from the ancient hindu villege of neervely. The culture, simplicity and goodness which were some of his characteristics were, I belive, to some extent inherited by him. that belonged to the family and the villege. His outstanding service to the public was the Attiaar hindu college brought in to being and endowed by him education of hindu children in hindu environments and hindu atmosphere under hindu management was an ideal which was enunciated with great vigour and clarity by the revered seela sri arumuga navalar, the originator of modern hindu revival in ceylon. leaders like the late sivapragasa pandither and sangara

pandither of neervely were among the great souls who laboured for this ideal. in the ancient Village of neervely, in hindu lines. at a crucial juncture mr. attiaar with rare public spirit and imagination took over this undertaking from the pandither's descendent , enlarged it to very great degree and brough it to its present state.he further endowed the institution with valuable landed properties. this institution contributed greatly to the preservation of hindu culture and religion and ideals among the people of neervely and adjoining villages. it became a leading institution in the whole of jaffna district. Mr. Attiaar arunachalam will rank as one of the greatest personalities who had laboured for the cause of hindu education during our times. a person who was of great help to mr. attiaar was the late Mr. Stephen, a high official in the colombo commercial company at which firm Mr. Attiaar worked. Mr. Stephen was high souled Englishman who was full of kindnees and sympathy towards mr. attiaar and his public-spirited educational efforts. he was also a great lover of the tamil people during his stay in colombo mr. arunachalam participated in many religious and public causes and did not shirk responsipility. he was regular worshiper at sivasubramania temble at slave island, and served the temple with great devotion. he was at one chief trustee of the temple. he was actively asociated with the ceylon saiva paripalana sabhai and the vivekananda society, two hindu institutions which have been working at colombo for the welfare of the hindus.

On his return to jaffna after his stay in the upcountry area and colombo he identified himself with the civic activities of neervely and was a member and elected chairman of the villege committee of neervely and endeavoured to do his. his with the usual enthusiasm and zeal.

Mr. arunachalam was one of those earlier pioneers who took an interest in the religious education of the members of the hindu priesthood. he made several efforts to make arrangements to impart religious education to members of the hindu priesthhood.

He was also associated with the Thiruketheeswaram temble restoration movement and was devotee of that temple.

Mr. Arunacahlam was one of the earlist members of the all-celylon tamil congress and worked for the fulfillment of its progress both at colombo and jaffna. he was a member of the communittee and used to attend meetings both organised by the congress and by the committee with remarkable consistence and devotion.

Mr. arunachalam was predeceased by his devoted wife several years ago. the lady was a good and gracious hindu lady who loyally enabled mr. arunachalam to carry on his noble work and thus fulfilled the character of the hindu dharamapathini. husband and wife were noted for their great hospitality. he has left behind his son who no doubt would faithfully walk in the footsteps of his parents. Mr. Attiaar Arunachalam's personality and service will endure for some considerable period of time, long in this fleeting world of ours. he has left behind a record of a good life lived well in the service of his country produce people like him in the difficult days to come and may some of the ideals which he pursued with great tenacity inspire future generations.

*O little hearts! that throb and beat,*
*with such impatient feverish heat,*
*such limitless and strong desires,*
*Mine that so long has glowed and burned,*
*With passions into ashes turned,*
*Now covers and conceals its fires,*
*O little souls! as pure and while*
*And crystalline as rays of light*
*Direct from heaven, their source divine;*
*Refracted through the mist of years,*
*How red my setting sun appears,*
*How lurid looks this soul of mine!*

-H.W.Longfellow

# The Late Mudaliyar Attiaar Arunachalam, J.P.

### *An apprecition by*

### *GATE MUDLR. C. THIAGARAJAH*

Mudaliyar Attiaar Arunachalam was a contemporary of mine at the Jaffna Hindu College. We were in Colombo during our working life and later in Jaffna we were fellow workers for the social upliftment of our people. Therefore, I am in a special sense qualified to write on the life of the late Mudaliyar Attiaar Arunachalam.

He was great Social worker. For the advanecment of education he founded the Attiaar Hindu College at Neervely for the benefit of Hindu boys and girls. The Attiaar Hindu college has progressed and today ranks as one the important colleges in the Jaffna District. This was entirely due to the munificience, guidance and support of Mudaliyar Attiaar Arunachalam.

He was doing a lot of work in the field of co - operation and was the president of the Neervely Multipurpose cooperative Society. The workdone by this society under Mudaliyar Attiaar Arunachalam for the welfare of the farmers of the area was great and speaks well of him.

In the field of Community centre activities. I can personally testify to the contribution of Mudaliyar Attiaar Arunachalam. He also did good work in connection with the National Savings Movement. He was Vice -President of the Jaffna Branch of the St. John Ambulance Association. He was a member of various committees set up by the Government Agent in this district and did constuctive work. He was also a member of the committee of the Jaffna Branch of the National Council for the welfare of the Deaf and Blind.

Mudaliyar Attiaar Arunchalam was a good man. He was charitable and was always cheerful and pleasent. He held high ideals of conduct and always stuck to them.

By his death Jaffna has lost one of its distinguished souls and Neervely an illustrious patron. may his soul rest in peace.

*O father, gracious was that word which clos'd*
*Thy sovereign sentence, that man should fiud grace;*
*For which both Heav'n and Earth shall high extol*
*Thy praises, with th' innumerable sound*
*Of Hymns and sacred Songs, wherewith thy Throne*
*Enocompass'd shall resound thee ever blest.*

*For should Man finally be lost, should Man.*
*Thy creature late so lov'd, thy youngest Son*
*Fall circumvented thus by fraud, though joined*
*With his own folly? that be form thee far,*
*That far be from thee, who art judge*
*Of all things made, and judgest only right.*

*-Milton in "Paradise lost"*

# A TRIBUTE TO
## Mudaliar ATTIAAR ARUNACHALAM J.P.
***by. muhandiram E. P. RASIAH, J.P.***

The late Mudaliar Attiaar Arunachalam, born 76 years ago, died suddenly at his residence at Neervely surrounded by his kith and kin. He happened to be the latest victim of that fell disease, Coronorary Thrombosis. Men and women, boys and girls of all rank and station continue to bemoan his loss.

Born into life in the lap of luxury and oppulence, he lived discarding ease and indolence, voluntarily embracing austerity and asceticism. Although denied the advantages of a University education, yet, he was the pioneer and founder of an Institution for the inculcation of primary and secondary education to the youths in and around Neervely.

Blue - blooded by birth, he lived to be the elected representative of his village Committe and for some time officiated as its democratic Head. He also paricipated in varied capacities, in volunatary Organisations such as the F.I.N.S., the St. John Ambulance Associations, the Co-op. Society, the National Council for the Deaf and Blind, the C.N.A.P.T. and the National Savings Movement. To all of these, he gave much of his spare time and assisted the Office bearers in their effcient working.

He talked with crowds and yet kept his virtues. He moved with kings and ne'er lost the common touch. He was a man of wisdom, but it was not the wisdom of the intellect, it was the wisdom of the heart, of compassion and of understanding. Behind his austere and short build, there beat a tender heart. He was somewhat shy. yet sincere, suave and almost French in his politeness. He greeted friend or foe alike with a gracious, friendly urbanity and disarmed even strangers with his genial, winsome smile.

He was a good Tamil, a devout Hindu, an outstanding public figure in Jaffna and a patriotic son of Sri Lanka. He was highly respected, if not loved by all in the North and the South as he had dedicated most part of his life for the cause of education and the uplift of down trodden humanity.

Up to the time of his demise, he had caused his heart and nerve and sinew to serve their turn Long after they were gone, filling the unforgiving minute with 60 seconds worth distance run.

Sartorially. he was the champion of Tamil national dress, and invariably donned it. he was a striking figure, dignified and stately in turban, long coat and trousers. The sword and braided unifrom of Mudalyar gave added lustre to his personality.

Unlike the average man, who fretted and fumed hounded by memories of yesterday, agonies of today and horrors of tomorrow, Mudaliar Attiaar Arunachalam took light - heartdely to life and its service interlarding them with sincerity and goodwill.

Mudaliar had come down to Jaffna to sponsor the claims of his Co - op. Society to despatch some consignment of onions to Colombo and in doing that, he had collapsed and the end had followed. He had losthis life in the actual discharge of a public duty. What a noble end to a noble soul?

To us Hindus, Death preludes re - birth and the spark of live goes on living; hence the Being whom we knew as Attiar Arunachalam may have already been flashed into existence on a distant plane as a purified Avatar. Or may be, that the wave - length has alread vitalized some human conception somewhere, to be reborn in due course as a nobler soul in some part of this wide world to do greater good to mankind. Till then may his soul rest in peace.

*Om shanti! Shanti!! Shanti!!!*

*All strength - all terror, single or in bands,*
*That ever was put forth in personal form*
*Johovah - with his thunder. and the choir*
*Of shouting Angels, and the empyreal thrones.*
*I pass them unalarmed. Not chaos, not*
*The darkest pit of lowest Erebus,*
*Or aught of blinder vacancy, scooped out*
*By help of dreams - can breed such fear and awe*
*As fall upon us often when we look*
*Into our Minds, into the Mind of man -*
*My haunt, and the main region of my song.*

- Weffiam Wordsworth

# Attiaar, The Utilising Social Worker.

***by. J. T. SABAPATHIPILLAI, Esq***
***D. R. O., KOPAY***

It can truly be said of the late Mudaliyar Atriaar Arunachalam that he dedicated his life to the cause of education and worked unceasingly towards this end. sacrificing his personal comforts, in order to provide educational facilities to the residents of Neervely and the neighbouring villages. Attiaar Hindu College, built entirely from his own resources, stands as a great monument to the magnanimity, large - heartedness and the untiring efforts of our late revered Attiaar. His memory will long live in the hearts of the people and generations to come will be grateful to him and for his life's work.

The task of establishing an educational institution would have been too much of a burden for most fo us to bear but the late Attiaar, lacking in financial resources, as he did, was able to shoulder it and accomplish it with ease. He was always one who believed with the famous poet, Tennyson. that.

*"More things are wrought by prayer
than this world dreams of"*

One Cannot but wonder how Attiaar could have started and developed his College to its present state. The only conclusion on could come to, is, that the hand of God was with him in all his undertakings.

That late Attiaar's interests were not confined to the field of education alone. He joined whole - heartedly in any work intended for the benefit of the village and gave of his best to such work; whether in his capacity as president of a Society (he was president of more than one society at the same time) or as a member. he worked untiringly to obtain for his village all amenities that were provided by Government. He even mede trips at has own expense to Colombo to see Heads of Department to Press for an allocation of funds for a road or building and invariably met with success.

There was no committee or other organizations in Jaffna for the welfare of the people in which Attiaar was not a member. He would make it a point ti attend every meeting and implement its decisions promptly. He was one who took a great dilight in serving his fellow - men even at great inconvenience to himself. He toiled day and night to improve the living conditions of the residents of his village and the neighbouring areas and left no stone unturned to achieve this end. The poor and downtrodden were his great concern and he would visit Government offices frequently tp speak on thir behalf and obtain for them the help they needed.

His manner of speech, his humility and genial disposition have helped him great measure to reach his goal in life. namely, the unpliftment of the village in which he lived. There are many Social Workers amongst us who are doing much towards the betterment of humanity but I have still ti meet a more genuine, ardent aud untiring worker than this late lamented Attiaar Arunachalam. May his soul rest in peace.

# THE LATE MUDALIYAR ATTIAAR ARUNACHALAM. J. P.

***by. S .K. KANDIAH, Esq, B. A***
***Teacher Attiaar Hindu College***

It was Jesus Christ who said, "Silver and gold have I none but what I have I give unto you" The late Mudaliyar Arunachalam was of the same mould as that which spoke such words. He have everything he had to the service of the poor as Jesus wanted. Perhaps he might have been one of the elven or, shall we say, he might have displaced Judas, if he had been born at the time of Jesus.

Without any endowments similar to those which made sir ponnambalam Ramanathan's achievements to a great extent relisable, given his personal initiative and acquired qualities, the late Mudaliyar aspired to achieve, on a much narrower canvas, the same noble aims which oliver Goldsmith too eulogised in his immortal line.

"The love he bore to learning was at fault"

Our Mudaliyar's devotion to the spiritual and material welfare of his compatriots was a continuation of that of both sir Ramanathan And Sri la Sri Arumuga Navalar.

He was among the first in Neerely to experience mobernism through white - collar Service and English education. If a persistent traditionalism in matters cultural and personal can be viewed as the stable substantial base for pragmatic adaptation and transitional change - over to more modern, more comprehensive and more cosmopolitan growth, Mudaliyar Arunachalam had such a persistent traditoinalism and such a pragmatic approach. Making allowances for his peasant antecedents and consequently limited material facilities, one may place him in the same category as Sir Ramanathan, Rajah Sir Annamalai Chettiar and Sir Ashutosh Mukherjee (a triofamed in the annals of Higher Education of Ceylon, Madras and calcutta).

As a representative of Hindu cultural values our Mudaliyar staked his all preserving the orthodox Hindu essence of his forbears and on endeavouring, with that core, to modernise society through English education, the gateway to modern emploument.

He activities, before Free Education and the Schools - Take - Over too, were extended to religious spheres where he actively participated in reviving choral singing of devotional song and in the annual expounding of Hindu Scriptures.

When the growth of national and social activities opened up new avenues he threw himself, heart and soul, into every avenue of rural, social and co - operative activity ranging from his village to the regional and district levels.

The late Mr. D. S Senanayake. when he first visited Valigamam East as premier of Free Lanka, had occasion to eulogies the services of Our Mudaliyar. That earlier Mudaliyar Arunachalam earned the most intimate and life - long friendship of Mr. Stephen, an Englishman of the Colombo Commercial Company, as well as the sustained appreciation of that institution where he worked as Chief Storekeeper, are the indications of his rise from the ranks. He was not feudal minded but was realistically democratic.

He was one of those non - political leaders who represented Jaffna at the funeral at Horagolla. A different dispensation later recognised the Mudaliyar's services by making him a J.P.in 1960.

The manner of his entire life and, not least. the manner of his dying while active in co - operative work in his 76th year show that at a different time and place he could have reached Churchillian proportions.

I repeat that could have been worthy of Jesus in the latter's time and of Churchill in the persevering devotion to ultra - personal, essential tradition and to resilient corporate assimilation of the new.

"God fulfils himself in many ways" and God has taken Mudaliyar Attiaar Arunachalam to himself to be with his Cherubim and Seraphim.

His wife, who predeceased him, was a mounment of patience and service to him and, as he used to say, a tower of strength to him, sharing in his simple joys and difficult experiences.

Now he is back in his sanctuary of the infinite from where we come as children. "traling clouds of glory from God who is our home"

What wordworth regarded as "Plain living and high thinking" we were able to see in the simple ways of our Mudaliyar and in his intense devotion to helping his compatriots at the village, the spiritual and the student levels. A wee little man, he was a veritable giant in his practical life, a patriarch to his own people and a cherished friend of the tallest among men in Ceylon.

## MESSAGE FROM R. M. SALMON Esqr.

***Retired chief Engineer Commercial Company Colombo)***

I was in intimate contact with Mudaliar Arunachalam during his employment as Head Store Keeper in the Engineering Department of the Colombo Commercial Company.

I Cannot speak too highly of his ability, honesty and keenness which were such a splendid example to all who worked under him

He truly earned and so well deserved the high degree of admiration and friendship which we all bore towards him

***yours Faithfully***
***R. M. Salmon***

ஷாம்பவி பதிப்பகம், நீர்வேலி, & யாழ்ப்பாணம். 021 2224143